விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 தை 27 வியாழக்கிழமை (09.02.2006) தொலைபேசி 222 3378 ஒலி 52

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# விடுதலைப்புலிகள் குறித்து சிங்களமக்களிடம் அச்சம்

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்த மதப்பிரதிநிதிகள் எடுத்துரைப்பு

தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கத்தோலிக்க மதப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று புதன்கிழமை சந்தித்துப் பேசினர்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.மதப்பிரதிநிதிகள் குழுவுக்கு மைக்கல் டீ வாஸ் தலைமை வகித்தார்.

சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுக்களைத் தொடங்கி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்று அக்குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர் தாயகத்தின் பதற்றமான அச்சமான சூழ்நிலையையும் இன்றைய அரசியல் நிலைமையையும் அக்குழுவினருக்கு தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

வடக்குக் கிழக்கில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற வன்முறைகள் குறித்து மதப்பிரதிநிதிகள் குழு கவலை தெரிவித்தது. இதற்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை நிறைவேற்றக் கோரி அமைதி வழியில் போராடி வந்த மக்கள் மீது இராணுவம் நெருக்குவாரங்களை ஏற்படுத்தியதன் விளைவாகவே அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவித்தார்.

நம்பிக்கையை கட்டியெழுப்ப அரசியல் பேச்சுகளுக்கான சாதகமான சூழலை உருவாக்கவேண்டும். இராணுவ நடமாட்டத்தை குறைத்து மக்களின் மனிதாபிமானப்பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.



தங்களது முன்னுரிமைப் பிரச்சினைகளுக்காக போராடும் தமிழ் மக்களின் போராட்டங்களை ஒடுக்கிற இராணுவத்தினரது மனோநிலை மாறவேண்டுமென்றும் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்.

விடுதலைப்புலிகள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு இருப்பதாக மதப்பிரதிநிதிகள் குழு கவலை தெரிவித்தது. இது தொடர்பில் விளக்கமளித்த தமிழ்ச்செல்வன் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழ்மக்களின் அமைதிக்காக பாடுபடுகிறவர்கள்.

சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருந்து தமிழ் மக்கள் விடுவிக்கப்பட்டு அரசியல் தீர்வு உருவாக்கப்பட்டு தமிழர்கள் வாழ்வில் இயல்புவாழ்க்கை திரும்பும்நிலையில் சாதாரண சிங்கள மக்களும் தமிழர்களின் சிறந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தையை குழப்ப ஜே.வி.பி திரைமறைவில் சதி

## கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தகவல் கசிவு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறப்

# பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூலை

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறப் போகும் பேச்சுக்களைக் குழப்புவதில் ஜே.வி.பி சதித்திட்டம் தீட்டி வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இன்று ஆரம்பம்

வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து பிரதேச உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்குமான வேட்புமனுத்தாக்கல் இன்று வியாழக்கிழமை முதல் நடைபெறவுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இன்று 9 ஆம் திகதி முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களின் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு நாட்டின் அனைத்து மாவட்ட செயலக தெரிவத்தாட்சி அலுவலர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 12 மாநகர சபைகளும் 18 நகர சபைகளும் 270 பிரதேச சபைகளுக்குமான வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்காக 52 அரசியல் கட்சிகளும் மற்றும் சுயேட்சைக்குழுக்களும் தயாராகிவருகின்றன. 4391 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெறும் இத் தேர்தலில் வட- கிழக்கில் இருந்து 815 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ந-9)

# துணைவேந்தராக்க வேண்டாம்

## ஜனாதிபதியிடம் பல்கலை மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கான துணைவேந்தர் தெரிவில் பேராசிரியர் ஹூலை நியமிக்க வேண்டாமெனக் கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக் கடிதத்தின் விபரம் வருமாறு;

யாழ்.பல்கலைக்கழகத்திற்கான அடுத்த துணைவேந்தரை தெரிவு செய்கின்ற விடயத்தில் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கிய சில விடயங்களை தங்களது தயவான கவனத்திற்குகொண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தப்பட்ட பணியாளர்களைத் தேடி நேற்று வெலிக்கந்தை வனத்தில் நுழைந்த பெற்றோர்

(கொழும்பு)

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை தேடி வெலிகந்தை வனப் பகுதிக்குள் நுழையும் போராட்டத்தை பணியாளர்களின் பெற்றோர்கள் நேற்றுப் புதன் கிழமை நடத்தினர்.

இது பற்றி போராட்டத்தில் ஈடுபட்ட பணியாளர்களின் உறவினர் ஒருவர் கூறுகையில் பணியாளர்கள் கடத்தப்பட்டது தொடர்பாக அரசாங்கம் செயற்படும் விதம் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது.

உரிய அதிகாரிகளிடம் இருந்து எதுவித தகவல்களையும் பெறமுடியவில்லை. இதனால் வெலிகந்தை வனப்பகுதியில் உள்ள துணை இராணுவக்குழுவினரது முகாம்களைத் தேட (12 ஆம் பக்கம் பார்க்க)




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விமானப்படை, பீரங்கிப்படை என சகல படைகளுடனும் வலுப்பெற்று நிற்கின்றோம்

## மட்டுமாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சீராளன்

விமானப்படை, பீரங்கிப்படை என சகல படைக்கட்டுமானங்களுடனும் எமது போராட்டம் வலுப்பெற்று நின்கின்றது.

எனவே அதனை மேலும் வலுவூட்ட மக்களாகிய நீங்களும் கைகொடுக்கவேண்டும் இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சீராளன் தெரிவித்தார். தாண்டியடி கிராமமக்களுக்கான தற்காப்புபயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுணதீவு பிரதேசத்திற்குட்பட்ட தாண்டியடி கிராம மக்களுக்கான கிராமியப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை தாண்டியடி பிரதேசப் பொறுப்பாளர் சக்தி தலைமையில் தாண்டியடி பாடசாலை வளாகத்தில் பி.ப. 4.00 மணிக்கு ஆரம்பமாகியது.

இதில் மங்கள விக்கினை பிரதேச பொறுப்பாளர் முக்கனி, போராளி சசிதரன் ஆகியோர் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் சீராளன் ஏற்றி வைத்தார். அதனை தொடர்ந்து மாவட்டத்துணை அரசியல் பொறுப்பாளர் சீராளன் உரை நிகழ்த்துகையில்,

நாட்டில் யுத்தநிறுத்தம் அமுல்படுத்தப்பட்டு 4 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எதுவித தீர்வும் கிடைக்கவில்லை மாறாக 200க்கு மேற்பட்ட போராளிகளையும் தளபதிகளையும் 500க்கு மேற்பட்ட பொது மக்களையும் இழந்து இருக்கிறோம். அதே சமயம் 50க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் காணாமல் போயுள்ளன.

தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்கக் கூடாது என்பதில் இலங்கை அரசும் ஒட்டுப்படைகளும் செயல்பட்டு வருகின்றன. எமக்கு சிறந்த தலைவர் கிடைத்திருக்கின்றார். தமிழ் மக்களின் பிரதி நிதிகள் விடுதலைப்புலிகள் என சர்வ தேச சமூகம் உணரும் வகையில் உயர்ந்துள்ளோம்.

ஏ.கே இருந்த கரங்களில் இப்போது எல்.எம்.ஜி.இருக்கின்றது. பிஸ்ரல் இருந்த கைகளில் பீரங்கி இருக்கிறது. விமானப் படை, பீரங்கிப்படை என சகல படைக்கூட்டுமானங்களுடனும் எமது போராட்டம் வலுப்பெற்று இருக்கின்றது. ஆனால் அதற்கு நீங்களும் கரம் கொடுக்க வேண்டும். நாங்கள் இந்தியாவினது கால்களிலோ அமெரிக்காவின் கால்களிலோ விழமாட்டோம் உங்களின் கரங்களினால் தான் உயர்ந்து நிற்கின்றோம்.

எமது போராளிகள் தலைவனின் கட்டளையை எதிர்பார்த்து இருக்கின்றனர். அவர் கட்டளை பிறப்பித்தால் கறுத்துபாலம் என்ன பட்டிருப்பு பாலம் என்ன எல்லாம் சிதறடிக்கப்படும் என சீராளன் மேலும் தெரிவித்தார். (க)

# எரிபொருளின் வீண் விரயத்தைத் தவிர்க்க தேசியக் கொள்கை அவசியமானது!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர்

(கொழும்பு)

எரிபொருள் வீண் விரயமாவதைக் குறைப்பதற்கான தேசியக் கொள்கை ஒன்று தேவைப்படுகிறது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

கொழும்பு நகரில் காணப்படுகின்ற வாகன நெரிசல்-இந்த வீண் விரயத்துக்கு முக்கிய காரணியாகும் சொந்த வாகனத்துக்குப் பதிலாக பொதுப் போக்குவரத்து தொடர்பில் மக்கள் தங்களது கவனத்தைச் செலுத்துவார்களேயானால், இந்த எரிபொருள் விரயம் குறைவடையும் என அவர் மேலும் கூறினார்.

இவ்வாறு குறைந்த எரிபொருளைப் யன்படுத்தி, புதிய வாகனங்களை இறக்குமதி செய் யும் வகையிலான கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவை.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகாரிப்பதற்கு ஏற்றதாக அரசு பல சலுகைகளை வழங்கியுள்ளது. இந்தச் சலுகையை மக்கள் மிகச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டுமெனவும் பெற்றோலியக் கூட்டுத் தாபானத்தின் தலைவர் கேட்டுக்கொண்டார்.

தற்போது ஒரு நிதியாண்டில் இலங்கை மசகு எண்ணெய் இறக்குமதிக்கென 1300 மில்லியன் டொடலர்களை செலவிடுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு-7)

# விபத்து

(சாவகச்சேரி)

வீதியோரத்தில் கட்டப்பட்ட மாட்டுடன்மோட்டார் சைக்கிள்மோதியதில் மோட்டார்சைக்கிளைசெலுத்தி வந்தவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் அண்மையில் முகமாலைப் பகுதியில் இடம் பெற்றது.

ய்யாழ்.சங்கிலியன் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி பாஸ்கரன் (வயது 46 என்பவரே காயமடைந்தவராவார். (க-108)

# ஜெனீவாவில் எந்த இடத்தில் பேச்சுவார்த்தை நடக்கும்?

## முடிவு சில தினங்களில்...

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைபபுலிகளுக்குமிடையலான பேச்சுவார்த்தையை ஜெனீவாவில் எந்த இடத்தல் நடாத்துவது என்பது குறித்து அடுதத சில தினங்களில் தீர்மானிக்கப்படவிருப்பதாக அரசாங்க சமாதான செயலகம் அறிவித்துள்ளது.

சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளர்களான நோர்வேத் த்ரப்பினர் சுவிற்சர்லாந்து அரசுடன் கலந்தாலோசித்து இதற்கான முடிவை எடுப்பார்கள் என்று சமாதான செயலகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் அரசாங்கக் குழுவினரின் விபரமும் விரைவில் வெளியிடப்படும்என அவர் தெரிவித்தார். (கு-4)

# இராசி பலன்

**09.02.2006**

**(தை 27, வியாழக்கிழமை)**

**துவாதசி பின்னிரவு 5.55மணிவரை**

**திருவாதிரை பின்னிரவு3.39மணிவரை**

**இராகுகாலம் 02.05-3.35மணிவரை**

**சுபநேரம் 8-05-9.35 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | கூட்டு முயற்சி, இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை. |
| இடபம் | பொருள்விரயம், குடும்பக்கவலை, அதிக பிரயாசை, காரிய தாமதம். |
| மிதுனம் | பெரியோர் மதிப்பு, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை. |
| கடகம் | மனக்குழப்பம், பணவிரயம், பிரயாணம், எடுத்த காரியம் தர்மதமாகும். |
| சிங்கம் | தொழில் சிந்தை, அபூர்வ சந்திப்பு, பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| கன்னி | கடின உழைப்பு, நல்ல செய்தி, பிறருக்கு உதவுதல், சுபகாரியம். |
| துலாம் | உடல்உழைப்பு, புதிய திட்டமிடல், அச்சமானநிலை, பிரயாணம். |
| விருச்சிகம் | எதிர்பாராத அச்சம், உடல்நலக் குறைவு, முயற்சி தடங்கல், போசனசுகம். |
| தனுசு | திடீர் பயணம், பணவருவாய், கௌரவமான நிலை, முயீற்சி கைகூடும். |
| மகரம் | சுகவாழ்வு, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, சத்துரு ஜெயம். |
| கும்பம் | வியாபார நன்மை, மனக்கவலை, காரிய தாமதம், பணக்குறைவு. |
| மீனம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், ரோக நிலை, அற்பர் உறவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# விபரம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கிராமங்களில் சுழற்சி முறைக் கடன் திட்டத்தினைக் கையாளும் கிராம மட்ட அமைப்புகள் தொடர்பான விபரங்களை நிக்கொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் நவரத்தினராஜா கோரியுள்ளார்.

விபரங்களில் பெயர் முகவரிகளுடன் பதவி நிலை என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (க)

# பௌர்ணமி காலச் சிந்தனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையினர் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு இந்து சமயப் பேரவை தலைமைச் செயலகத்தில் பௌர்ணமி காலச் சிந்தனை-1 எனும் நிகழ்வை நடத்தவுள்ளனர்.

பேரவையின் உபதலைவர் ந.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'சைவ வாழ்வியலில் ஆகமம்' எனும் விடயம் குறித்து யாழ்.பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஜயர் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார். (க)

# கண்ணிவெடியில் சிக்கிய 3 யானைகளும் மரணம்

(வவுனியா)

வவுனியா கணேசபுரம் நடுநிலை வனப்பகுதியில் சில நாட்களுக்கு முன்பாக இராணுவத்தினரின் கண்ணிவெடியில் சிக்கி படுகாயமடைந்திருந்த மூன்று யானைகளும் உயிரிழந்துள்ளன.

கண்ணிவெடியில் சிக்கிய இந்த யானைகள் எழுப்பிய சத்தத்தில் தகவல் அறிந்த இலங்கை சிறப்பு அதிரடிப்படையினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், கால்நடை மருத்துவர்களுக்கும் தகவல் தெரிவித்தனர்.

யானைகள் உள்ள பகுதி நடுநிலைப் பகுதி என்பதால் தாங்கள் செல்லும் போது இலங்கை சிறப்பு அதிரடிப் படையினரையும் அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கால்நடை மருத்துவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

வெடிபொருட்கள் தொடர்பான பாதுகாப்பு சிக்கலால் மருத்துவர்களின் கோரிக்கையை அதிரடிப்படையினர் நிராகரித்தனர்.

இதனால் காயமடைந்த நிலையில் உயிருக்குப் போராடிய மூன்று யானைகளும் நேற்றுமுன் தினம் உயிரிழந்தன. (க-7)

# வால் நட்சத்திரத்தில் பனிக்கட்டி படிவங்கள்

## -விஞ்ஞானிகள் தகவல்-

(வோஷிங்டன்)

வால் நட்சத்திரத்தில் பனிக்கட்டி படிவங்கள் இருப்பதாக நாசா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

சூரியன், பூமி மற்றும் சூரிய குடுத்பத்தில் உள்ள கிரகங்கள் எல்லாம் 460கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவானதாகக் கருதப்படுகிறது. வான வெளியில் இருக்கும் வாயுக்கள் அடங்கிய மேகங்கள் மற்றும் தூசுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சூரியன், பூமி, கிரகங்கள் ஆகியவை உருவாகி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

எஞ்சிய வாயுக்களும் தூசுக்களும் கிரகங்களின் எச்சங்கள்போல உருவாகின. அவையே வால் நட்சத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த வால் நட்சத்திரங்களும் சூரியன், பூமி போன்ற கிரகங்களும் ஒரே சமயத்தில் தோன்றியதால் அவை பற்றிய ஆய்வில் அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் தீவிரமாக இறங்கினார்கள்.

அந்த சோதனைக்காக 'டீப் இம்பேக்டர்' என்ற செயற்கை கோளை வான் வெளியில் ஏவி கடந்த ஜூலை மாதம் 'டெம் பிள்-1' என்ற வால் நட்சத்திரத்தின் மீது மோத வைத்தார்கள். அந்த சமயத்தில் வால் நட்சத்திரத்தில் இருந்து வெளியான தூசுக்கள் படம் பிடிக்கப்பட்டு அவற்றை வைத்து நாசா விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

வால் நட்சத்திரத்தில் பனிக்கட்டி இருக்கலாம் என்று ஆய்வுக்கு முன்பே விஞ்ஞானிகள் எதிர்பார்த்தனர். அது இப்போது உண்மை என்று உறுதியாகி இருக்கிறது.

வால் நட்சத்திரத்தின் மேல் பரப்பில் 3 அடுக்காக பனிக்கட்டி படிந்திருக்கிறது என்பது முதல் முறையாக தெரியவந்திருக்கிறது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். பனிக்கட்டி இருப்பது தெரிய வந்து இருப்பதால் வால் நட்சத்திர உள்பகுதியில் தண்ணீர் உறைநிலையில் இருக்க வாய்ப்பு இருப்பதாகவும் விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேரிலேண்ட் பல்கலைக்கழக ஆய்வு திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மைக்கேல் ஹெறின் கூறுகையில், 'இந்த ஆய்வின் மூலம் முக்கிய தகவல்கள் வெளி வந்திருக்கிறது. இதில் இருந்து வால் நட்சத்திர உள் பக்தியில் இருந்து தண்ணீர் ஆவியாகி வெளியேறு கிறது' என்று அறிய முடிகிறது' என்று தெரிவித்தார். (து)

# சகல சிறுவர் இல்லங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்புத் திணைக்களங்களுக்குச் சொந்தமான நன்னடத்தை இல்லங்களில் தங்கியிருக்கும் சிறுவர்களை ஒன்றாக வைத்திருப்பதில்லை என சிறுவர் விவகாரம் மற்றும் மகளிர் ஊக்குவிப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

குற்றச்செயல்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சிறுவர்களே இந்த இல்லங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறுவர்களை ஒன்றாக வைத்திருப்பதனால், பல சிக்கல் நிலைகள் தோன்றியிருப்பதாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பிட்ட சிறுவர் இல்லங்களில் போதிய இடவசதி இன்மையும் இதற்கு முக்கிய காரணம் என கூறப்படுகின்றது. இதனால் இந்த இல்லங்களின் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளும் வகையில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறுவர் விவகார மற்றும் மகளிர் ஊக்குவிப்பு அமைச்சர் கூறினார்.

அதன்படி அரசாங்கம் மற்றும் வெளிநாடுகளின் நிதியுதவி மூலம் சகல சிறுவர் இல்லங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-7)

# பாதுகாப்பு அச்சம் காரணமாக முதலீடுகள் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பாதுகாப்பு அச்சம் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளில் பாரிய வீழ்ச்சி காணப்படுவதாகவும், அதனால் அரசின் உத்தேச பொருளாதார வளர்ச்சி வீதம் 4.6 ஆகவே இந்த ஆண்டு இருக்கும் எனவும் எதிர்வு கூறியுள்ள உலகவங்கி இலங்கை இலக்கு வைத்திருக்கும் 8 வீத பொருளாதார வளர்ச்சி சாத்தியப்படப் போவதில்லையெனச் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேநேரம் மோதல்கள் உக்கிரமடையாத பட்சத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4 சதவீதத்திற்கு குறையாமலும் 6 சதவீதத்திற்கு மேற்படாமலும் இருக்கும் தன்மைதான் தற்போது வெளிப்படுகின்றது என்று உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பிற்றர் ஹெரோட்ல்ட் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த வேளையில் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதனாலேயே தமிழீழ விடுதலைப்புலிகளுடனான தமது சந்திப்பை தற்போது ஒத்திவைத்துள்ளதாகவும், அரசாங்கத்துடன் இது குறித்து கலந்துரையாடிய பின்னர் இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்திருக்கும் பிற்றர் ஹெரோட்ல்ட் அண்மையில் கடத்தப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் பணியாளர்கள் பாதுகாப்பாக விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உலகவங்கியின் கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலகவங்கியுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து நடத்திய இந்தச் செய்தியாளர் மாநாட்டில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் அலெஸ் ஷான்றோ பியோவும் கலந்துகொண்டிருந்தார்.

இந்தச் செய்தியாளர் மாநட்டில் மேலும் கருத்து வெளியிட்ட பிற்றர் ஹெரோட்ல்ட்,

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவுள்ளன.

இது மிக முக்கியமானதொன்று. ஏனெனில் அண்மையில் நாட்டின் நிலைமைகள் மிக மோசமான ஒரு கட்டத்தில் இருந்தன. இந்த நிலைமைகள் மேலும் ஏற்படாது தடுக்கப் பேச்சுக்கள் மிக அவசியமானவை.

நாம் இந்த நாட்டில் சமாதானம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக ஆதரவு வழங்குகின்றோம். நாம் மட்டுமின்றி இங்கு பல அமைப்புக்களும் நிரந்தர சமாதானத்தையே விரும்புகின்றனர்.

பேச்சுக்களை நடத்துவதற்கு தற்போது இரண்டு தரப்பினரும் இணக்கத்தினை தெரிவித்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. இதற்காகவே நாம் எமது கிளிநொச்சி பயணத்தினை ஒத்திவைத்துள்ளோம். பேச்சுக்களுக்கு மீண்டும் இருதரப்பும் செல்வது மகிழ்ச்சி தருகின்றது. நாம் மீள் கட்டுமான பணிகள் பற்றி கலந்துரையாடவே கிளிநொச்சிக்குச் செல்லவிருந்தோம் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## கண்காட்சியும் ஆண்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்தால் நடாத்தப்படும் (மற்று வலுவுடையோரினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின்) கண்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சங்க கட்டடத்தில் மு.ப 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மீளமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட பிரதிநிதி திருமதி கமலா சிவசிதம்பரம் கலந்துகொள்ளவுள்ளார்.

கண்காட்சி நிறைவுநாளான ஞாயிற்றுக் கிழமை மு.ப 7.00 மணிமுதல் 1.00 மணி வரை ஆண்டுவிழா நிகழ்வுகள் இடம்பெறும்.

ஆண்டுவிழா நிகழ்வில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக யூனியன் அஷ்யூரன்ஸ் பிராந்திய முகாமையாளர் நி.ந.மதிவதனன் கலந்துகொள்ளவுள்ளார். (க)

# பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படலாம்

## கொழும்பு ஊடகம் ஊகம்

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கை அரசுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையின் போது, போர்நிறுத்தம் பற்றி மட்டுமே பேசுவோம் என்று விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். இதனால் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படலாம் என கொழும்பு ஊடகம் ஒன்று ஊகம் வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் விடுதலைப்புலிகள் தனிநாடு கேட்டு போராடி வருகிறார்கள். இதனால் அரசாங்கத் தரப்பில் இராணுவ வீரர்களும், விடுதலைப்புலிகளின் வீரர்களும் ஏராளமான அளவில் பலியாகி வருகின்றனர்.

இந்த உயிர்ச்சேதத்தைத் தவிர்க்கவும், இரு தரப்பிலும் சுமூகமான நிலைமையை ஏற்படுத்தவுமே அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமரசம் செய்து வைக்க நோர்வே நாடு முன்வந்தது.

இதன் முதல் கட்டமாக கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது. பின்னர் பல கட்டங்களாக சமரச பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஆனால் இடை இடையே இரு தரப்பிலும் போர் நிறுத்தம் மீறப்பட்டு மாறி மாறி தாக்குதல் நடத்திக்கொண்டனர். இதனால் சமரச பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

இந்நிலையில் இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவி ஏற்ற பின்னர் மீண்டும் சமரச பேச்சுவார்த்தைக்கு நோர்வே நாடும் ஜப்பானும் முயற்சி எடுத்தன.

இலங்கைக்கு வெளியே வேறு நாட்டில் இந்தச் சமரச பேச்சுவார்த்தையை நடத்தலாம், எங்கள் நாட்டில் நடத்த முன்வந்தால் ஒத்துழைப்பு அளிக்கத் தயார் என்று ஜப்பான் அறிவித்தது.

ஆனால் இதை விடுதலைப் புலிகள் முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர் நோர்வே மேற்கொண்ட தீவிர முயற்சியால் இலங்கைக்கு வெளியே பேச்சு நடத்த அவர்கள் ஒத்துக்கொண்டனர்.

இதன்படி சுவிற்சர்லாந்து நாட்டின் தலைநகர் ஜெனிவாவில் எதிர்வரும் 15ஆம் திகதி நோர்வே தூதுக்குழு முன்னிலையில் பேச்சு நடப்பதாக இருந்தது. பின்னர் 22, 23 ஆம் திகதி பேச்சு நடத்த முடிவானது.

அதன்படி எதிர்வரும் 22ஆம் திகதி சமரச பேச்சு நடைபெற இருக்கிறது. 2 நாட்கள் இந்தப் பேச்சுவார்த்தை நடக்கிறது.

ஆனால் இந்தப் பேச்சுவார்த்தையின் போது போர் நிறுத்தம் பற்றி மட்டுமே பேசுவோம். வேறு எந்த விடயம் பற்றியும் பேசமாட்டோம் என்று விடுதலைப்புலிகள் நிபந்தனை விதித்துள்ளனர்.

இதுபற்றி விடுதலைப் புலிகளின் அதிகாரப் பத்திரிகையான விடுதலைப்புலிகள் என்ற இதழில் எழுதியுள்ள தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது, போர் நிறுத்தத்தை மாற்றி அமைப்பது பற்றி நாங்கள் பேசத் தயாராக இல்லை. அதேபோல போர் நிறுத்தத்தைப் புறக்கணித்துவிட்டு பேச்சுவார்த்தை நடத்தவும் நாங்கள் தயார் இல்லை.

அதேசமயம் அரசியல் தீர்வு காண்பது தொடர் பாக பேசி நேரத்தை வீணாக்கவும் நாங்கள் தயார் இல்லை. போர் நிறுத்தத்தை இன் னும் எப்படிப் பலப்படுத்தலாம் என்பது பற்றி மட்டுமே நாங்கள் பேசுவோம். எங்களை முட்டாளாக்க வேண்டாம். சிங்கள தலைவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதா கக் கூறிக்கொண்டு எப்போதும் உலக மக்களை முட்டாளாக்கி வருகிறார்கள்.

அதேபோல தங்களைப் போருக்குத் தயார்படுத்திக்கொள்ள சமாதானப் பேச்சு என்ற வாசகத்தைச் சிங்களத் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இனியும் அப்படி மக்களை முட்டாளாக்க வேண்டாம் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

சமரச பேச்சுவார்த்தைக்கும், அரசியல் தீர்வுக்கும் விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் ஏற்கனவே அடித்தளம் அமைத்துவிட்டனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பதுதான் அந்த அடித்தளம். நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு பல திருத்தங்கள் செய்யப்பட்டது. இருதரப்பாலும் கையெழுத்திடப்பட்டது. அதைச் சரியாக அமுல்படுத்துவதே அரசியல் தீர்வுக்குச் சரியான வழியாகும்.

இப்போதுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தில் எந்தவித திருத்தம் செய்யவோ, எந்த சரத்தையும் நீக்கவோ ஒத்துக்கொள்ள மாட்டோம். அதை முழுமையாக அமுல்படுத்தி எங்கள் தமிழ் மக்களின் பகுதியில் போர் ஏற்படாமல் தவிர்க்கவும், சமாதானமான சூழ்நிலை நிலவுவதற்கான வழிகளைக் காண்பது பற்றி மட்டுமே நாங்கள் பேச்சு வார்த்தையின்போது எடுத்துவைப்போம்.

எங்களுடைய இந்த நிபந்தனைகளை மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறோம்.

அதில்தான் சமரச பேச்சுவார்த்தையின் வெற்றி அமையும். இதேவேளை விடுதலைப் புலிகளிடையே பிரித்தாளும் சூழ்ச்சியை மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் கையாண்டு மோதலை உருவாக்கி வருகிறது. அதை முதலில் நிறுத்த வேண்டும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் எங்களுக்குப் போரைத் தவிர வேறு வழியில்லை என்று எச்சரிக்க விரும்புகிறோம் என அந்தத் தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது.

இதனால் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படலாம் இல்லாவிடின் ஜெனிவாப் பேச்சுக்களின் பின்னர் நடைபெறும் பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்படலாம் என அந்த ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (க)

# வருடாந்த இடமாற்ற உத்தரவைப்பெற்ற அரச உத்தியோகத்தர்களின் கவனத்துக்கு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண அரச சேவையில் 2006 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற உத்தரவுகளைப் பெற்ற சகல அரச உத்தியோகத்தர்களும் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமது புதிய சேவை நிலையங்களுக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு மாகாண பொது நிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை இடமாற்ற உத்தரவுகளைப் பெற்று, புதிய சேவை நிலையங்களுக்குச் சென்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்ந்து தமது புதிய நிலையங்களிலேயே கடமைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மார்ச் மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவுகள் புதிய சேவை நிலையங்களில் வழங்கப்படவுள்ளன.

இடமாற்ற உத்தரவைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் பழைய சேவை நிலையங்களிலேயே கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மார்ச் மாதத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படக்கூடாது என்று திணைக்களத் தலைவர்களுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (க-7)

# நீர்கொழும்பு மேயரை விடுவிக்க சட்டவிரோத முயற்சிகள்

(கொழும்பு)

நீர்கொழும்பு மேயரை பிணையில் விடுவிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மாகாண சபைத் தலைவர் ஒருவர் சட்டவிரோத முயற்சிகளை மேற்கொண்டதாக நீதித்துறைகள் சேவை ஆணைக்குழுவிடம் கொழும்பு நீதிபதி முறைப்பாடு செய்துள்ளார்.

இலஞ்சக் குற்றச்சாட்டுக்களின் கீழ் நீர்கொழும்பின் மேயர் ஹென்றி நியூட்டன் பெர்னாண்டோ கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரைப் பிணையில் விடுவிக்க தென்மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தம்மை அணுகியதாக அந்த மனுவில் கொழும்பு நீதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் நீர்கொழும்பு மேயருக்கு பிணை அளிக்க மறுத்த கொழும்பு நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (து)

## நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு புதிதாக கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (து)

## கணித, விஞ்ஞான வள நிலையம் திறப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்கான கணித, விஞ்ஞான வள நிலையம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் திறந்து வைக்கப்படும் என தென்மராட்சி வலய பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் தெரிவித்துள்ளார். (க-108)

## இடமாற்றம்

மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் வடமராட்சி கல்வி வலயத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் செயற்படும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பதவி வெற்றிடமாகவுள்ளதால் அப்பதவிக்க தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, மேற்படி பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்குத் தன்னை நியமிக்கவில்லையெனவும் தனக்கு போதிய தகுதிகள் இருப்பதாகவும் முன்னாள் கல்லூரி அதிபர் ஒருவர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார் என தெரிவயருகிறது. (க-101)

# பொறுப்பை ஏற்றுக்கொண்டார் அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

அமைச்சர் மகிந்த சமரசிங்க அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சுப் பொறுப்பை நேற்றுக்காலை ஏற்றுக்கொண்டார்.

கொழும்பில் உள்ள வளிமண்டலவியல் திணைக்கள வளவில் இந்த அமைச்சின் அலுவலகம் அமைந்துள்ளது.

அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையில்,

இயற்கை அனர்த்தங்கள் மாத்திரமல்லாமல் மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்கள் தொடர்பாகவும் தான் கவனம் செலுத்தவுள்ளதாக தெரிவித்தார். (க-7)

## இன்று ஒரு தகவல்

### ஆத்திரத்தில் அர்த்தமில்லை

ஒரு முஸ்லிம் பெரியவர் இருந்தார். அனுபவசாலி. நிறைய விடயம் தெரிந்தவர். இந்த உலகத்தில் எப்படி வாழவேண்டும் என்பதை பலபேருக்குச் சொல்லிக் கொடுககும் தகுதி உள்ளவர். அந்தப் பெரியவரைத் தேடி ஒரு நாள் ஒருவன் வந்தான். வந்தவன் மிகவும் படபடப்பாக வந்தான். முகத்தில் கோபம். வந்தவழியில் யாரிடம் என்ன தகராறோயாருக்குத் தெரியும்?

வந்தவன் என்ன செய்தான் தெரியுமா? காலில இருந்த செருப்பைக் கழற்றி கோபமாக ஒரு மூலையில் வீசியெறிநதான் கதவை வேகமாகப் படாரென்று சாத்தினான் கோபத்தில் இருப்பவன் இப்படித்தான் நடந்து கொள்வான். சும்மா இருப்பதை யெல்லாம் தனது ஜென்ம விரோதியாக நினைத்துக்கொண்டு இவனும் இப்படி நடந்துகொள்கிறான். அதன்பின் அவன் மெதுவாக உள்ளேவந்தான் பெரியவர் முன்பு வந்து நின்றான் மரியாதை செலுத்தினான் உடனே இந்தப் பெரியவர் என் சொன்னார் தெரியுமா?

“இதோ பாரப்பா... உன் மரியாதையை நான் ஏற்றிக் கொள்ள முடியாது முதலில் நீ போய் அந்த செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்டுவிட்டு அதன் பின் இங்கே வா’’ என்றார். வந்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை என்ன இது இவர் இப்படிச் சொல்கிறார் செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்பு கேட்பதா...அது எப்படி முடியும்? அதெல்லாம் என்ன உயிருடனா இருக்கிறது? மன்னிப்புக் கேட்பதற்கு? என்று நினைத்தான் அதை அந்தப் பெரியவரிடம் கேட்டுவிட்டான். அவற்றிற்கு உயிரில்லையே என்றான். அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார் நீ உன்னுடைய கோபத்தை அவற்றின் மீது காட்டும் போது இப்படி நினைக்கவில்லையே!

அந்த செருப்பு இரண்டும் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டதாக நினைத்து தூக்கியெறிந்தாய் கதவைப் பெரியவிரோதியாக நினைத்துக்கொண்டு வேகமாகத் தள்ளினாய் உன்னுடைய கோபத்தைக் காட்டுவதற்கு மட்டும் அவற்றிற்கு உயிர் இருப்பதாக நினைக்கும் போது மன்னிப்பு கேட்பதற்கும் அதற்கெல்லாம் உயிர் இருப்பதாகத்தான் நினைக்கவேண்டும். என்றார்.

பெரியவர் சொல்வதை மறுக்கக் கூடாது என்று நினைத்து அந்த செருப்புகளிடம் போனான். கும்பிட்டான் நண்பர்களே... உங்களை அவமதித்து விட் டேன். மன்னித்து விடுங்கள் என்றான். அடுத்ததாகக் கதவுகளிடம் போனான. ஏதோ கோபத்தில் உங்களைப் பிடித்து வேகமாக தள்ளிவிட்டேன். அதற்காக இப்போது வருத்தப்படுகிறேன் என்றான். இப்படிக் கேட்டவுடன் அவனது மனம் இலேசாகிவிட்டதாம் அமைதியும் சாந்தமும் கிடைத்ததாம் இது அவனுக்கே ஆச்சரியமளித்ததாம்.

ஒரு கதவிடமும் ஒரு ஜோடி செருப்பிடமும் மன்னிப்புக் கேட்பதனால் ஒரு மனிதன் இந்தளவுக்கு அமைதியும் சந்தோஷமும் பெறமுடியும் என்பதை அவன் கற்பனை செய்து கூட பார்க்கவில்லையாம். அப்படி மன்னிப்பு கேட்டபின்பு அவன் மறுபடியும் உள்ளே போய் அந்த முஸ்லிம் பெரியவரின் பக்கத்தில் உட்கார்ந்தான். இப்போது அவர் சிரித்துக்கொண்டே சொன்னார். “ இப்போதெலலாம் சரியாகிவிட்டது. இப்போது தான் நான சொல்வதை நீ கேட்க முடியும் இனிமேல் நாம் பேசலாம் என்றார்.

இப்போது நீ கொஞ்சம் அன்பு செலுத்தியதால் உன்னுடைய பாரம் கொஞ்சம் குறைந்துவிட்டது. இனிமேல் நமக்கிடையில் நல்லதொரு தொடர்பு இருக்க முடியும் என்றும் சொன்னாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. கோபம் வந்து விட்டால் செருப்புககு கூட உயிர் இருப்பதாக நினைத்துவிடுகிறோம் என்று தெரிகிறதா இல்லையா? கதவிடம் கூட கைகலப்பிற்குத் தயாராகி விடுகிறோம். நம்மில் சில போ தொலைபேசியிடம் கூட கோபத்தைக் காட்டுவார்கள் பொத்தென்று கோபமாக அதை வைப்பார்கள் நாம் சரியில்லாததற்கு அது என்ன செய்யும் பாவம்.

நமது ஆள் ஒருவன் செருப்புக்கு மிகவும் மரியாதை கொடுத்துக்கொண்டிருந்தான் ஒரு திருமண மண்டபத்தின் வாயிலில அவன் நின்று கொண்டிருந்தான். வெளியில் வருவோரின் காலில் பொத்பொத்தென்று விழுந்து அவர்களின் செருப்பைத் தொட்டுக் கும்பிட்டுக் கொண்டிருந்தான். இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு ஆளா? என்று நினைத்துக்கொண்டே அருகில் போனேன் என் காலிலும் பொத்தென்று விழுந்தான்.

“ஏன் இப்படிச் செய்கிறாய்?’’ என்று கேட்டேன் என் செருப்பைக் காணவில்லை சார் எவன் அதைப் போட்டுக் கொண்டு வருகிறான் என்று செக்பண்ணிக் கொண்டிருக்கிறேன்’’ என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வெற்றித் திலகமிட்டு பிள்ளைகளை புலிகளிடம் ஒப்படைக்கும் பெற்றோர்

(கிளிநொச்சி)

சிங்கள பேரினவாதத்தின் தமிழின ஆழிப்பை எதிர்த்தும் தமிழீழ தேசத்தின் விடிவை விரைவாக ஏற்படுத்துவதற்காகவும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை வெற்றித் திலகமிட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்து வரும் நிகழ்வுகள் வடக்கு கிழக்கில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி அக்கராயனைச் சேர்ந்த திருமதி தியாகராசா என்ற தாய் இவ்வாறு தனது மகளை போராட்டத்தில் இணைத்துள்ளார். அக்கரையான் வலயப் பொறுப்பாளர் குட்டிமணியிடம் கடந்த திங்கட்கிழமை தனது மகளான தி.ஜெனிதாவை விடுதலைப் போராட்டத்திற்காக இணைத்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் நீடித்துச் செல்லக் கூடாது. விரைவில் தமிழீழ தனியரசை நாங்கள் அடையவேண்டும் அதற்காக எங்கள் தலைவரின் கையை நாம் பலப்படுத்த வேண்டும் . அனைத்துத் தாய்மாரும் தமது பிள்ளைகளைப் போராட்டத்தில் முன்வந்து இணைந்து தலைவரின் கையை பலப்படுத்த வேண்டும . அதற்காகவே நான் எனது மகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முன் வந்து இணைக்கின்றேன் எனவும் வலயப் பொறுப்பாளர் குட்டி மணியிடம் திருமதி தியாகராசா தெரிவித்தார்.

இதேபோல் மன்னார் மாவட்டத்தின் பலாப்பெருமான் கட்டு வட்டக்கண்டல் எனும் பகுதியில் வசித்து வரும் சண்முகம் காளியம்மா எனும் இத்தாயாரும் தனது ஆறு பிள்ளைகளில்ஒருவரை தாயக விடுதலைப் போருக்காக தானாகவே முன்வந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப் பில் இணைத் துள்ளார்.

பிரபாகரன் எனும் மகனை கடந்த திங்கட் கிழமையன்று மன்னார் மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் இத்தாயார் விடுதலைப் போருக்காக அனுப்பி வைத்ததோடு தமிழ் பெண்களின் வீரவரலாற்றை நினைவுபடுத்தும் முகமாக மகனுக்கு நெற்றி திலகமிட்டு போருக்கு போய் வருமாறு விடை கொடுத்தனுப்பிய தாகவும் கூறப்படுகின்றது தன்மகனை போருக்கு அனுப்பிய அத் தாயார் கூறியதாவது, எனக்கு ஆறு பிள்ளைகள் இருக்கின்றார்கள் எனது கணவர் மன்னார்ப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகி சுகவீன முற்றிருந்து 1997 ஆம் ஆண்டு இறந்து விட்டார். அவர் உயிரோடு இருக்கும் போது இரண்டு பிள்ளைகளை தேச விடு தலைப் போருக்கு அனுப்பவேண்டும் என்று கூறி வருவார் . அவர் இறந்ததன் பின்பு தான் எனதுபிள் ளைகளுக்கு போராடும் வயது நிரம்பியதால் இப் போது நான் எனது மகனை இயக்கத்தில் இணைக் கிறேன் .

விடுதலைப் போருக்காக ஒரு பிள்ளையைப் பெற்றபெற்றோர்கள் கூட தமது பிள்ளைகளை இணைத்துள்ளார்கள். எனவே ஆறுபிள்ளைகளைப் பெற்ற நான் ஒரு பிள்ளையையேனும் போராட்டத்திற்கு அனுப்பாவிட்டால்தேசம் என்னை மதிக்காது.

எனவே தான் நான் இப்போது 19 வயது நிரம் பிய என் மகனை இணைந்துள்ளேன் தொடர்ந்து வரும் காலத்தில் விடுதலைப்போர் உக்கிரமடையும் நிலை உருவாகுமானால் எனது 20 வயது நிரம்பிய மற்ற மகனையும் போருக்கு அனுப்ப தயாராக இருக் கிறேன்

சிங்கள இராணுவ கெடுபிடிகளுக்குள் சிக்கி துன்பப்படுவதை விட எமது தேசத்தின் விடுத லைக் காக எனது பிள்ளைகளை போராட்டத்தில் இணைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது தேசியத்தலைவரின் போராட்டப் படையணிகளை வலுப்படுத்துவதற்காகவும் நீண்ட காலமாக சிங்கள பேரினவாதிகளின் அடக்கு முறையில் சிக்குண்டுள்ள எமது தாயக மண்ணையும் எமது இனத்தையும் மீட்டபதற்காவுமே எனது மகனை நான் போருக்கு அனுப்புகிறேன். எனது மகனும் என்னுடைய இலட்சியத்தையும் எனது கணவரின் இலட்சியத்தையும் நிறைவேற்றுவான் என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை உண்டு.

எனவே தான் நான்கவே முன்வந்து எனது மகனைப் போருக்குஅனுப்புகிறேன். என்னைப்போன்று இது வரை காலமும் இந்த விடுதலைப் போருக் காக தமது பங்களிப்பினைசெய்திருந்த ஒவ்வொருவரும் முன்வந்து பங்களிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் .

ஒவ்வொருதமிழரும் இப்படிச்செய்வதன் மூலமே எமது தேசம் விரைவில் விடுதலையடையும் என்று நான் நம்புகிறேன் என்றார். (க)

## கடற்படையின் கெடுபிடிகளைக் கண்டித்து பேசாலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

கடற்படையின் கெடுபிடிகளைக் கண்டித்து பேசாலையில் நேற்று முன்தினம் செய்வாய்க்கிழமை கண்டன ஆர்ப்பாட்ம்நடத்தப்பட்டது . தலை மன்னார்-மன்னார் பிரதான வீதியில் பேசாலை கடைவீதிப் பகுதியில் நேற்று முன்தினம் 6மெணி முதல் 11 மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இரவு நேர மீன் பிடித் தடை உள்ளிட்ட , கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு கடற்படையினர் விதித்திருக்கும் புதிய புதிய கெடுபிடிகள் கைவிடப்பட வேண்டும் என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நூற்றுக் கணக்கான மீனவர்கள் கோரிக்கை முழுங்கங்களை எழுப்பினர். மேலும் கடற்றொழிலிலிருந்து வீடு திரும்பும் மீனவர்களின் படகுகளைச் சோதனையிடும் கொடுரத்தை நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகரதலிங்கம், கிறிஸ்தவ மத பிரதிநிதி வின்செண்ட் பற்றிக், பிரதேசசெயலாளர் ஸ்டான்லி டி.மெல். , மீன்வளத்துறை உதவி இயக்குநர் ஜே.பி.ஜூலியன், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மன்னார் அதிகாரி இன்க் லெர் லீ மற்றும் சன்னிகிராம கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று மீனவர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

தங்களது கடற்றொழிலுக்கு விதிக்கப்பட்டிருக்கும் அனைத்துக் கெடுபிடிகளையும் தடைகளையும் உடனேகடற்படையினர் விலக்கிக்கொள்ள வேண்டும் எனறு மீனவர்கள் வலியுறுத்தினர். மீனவர்கள் கடற் றொழிலுக்குச் செல்லும் முன்னர் பதிவு செய்து விட்டு செல்வதையும் திரும்பி வரும் போதும் பதிவு செய்வதையும் கைவிடுவதாக கடற்படையினர் ஒப்புக்கொண்டனர்.

இரவு நேரத் தடைகள் உள்ளிட்ட விடயங்களுக்காக மதவாச்சிய புனவ கடற்படை தலைமையகத்திடம் அனுமதி பெற வேண்டும் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர். இதையடுத்து முற் பகல் 11 மணியளவில் மீனவர்கள் போராட்டம் கைவிடப் பட்டது. (து)

## த. பு. கழக பணியாளர்கள் கடத்தல்! வட-கிழக்கு ம.உ.செயலகம் கண்டனம்

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்டதும் அவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படாததும் அப்பட்டமான மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும். இதுதொடர்பாக நாங்கள் சர்வு தேசத்தின் கவனத்திற்கும் கொண்டுசெல்லும் நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றோம்.


இவ்வாறு வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார். இதுதொடர் பாக அவர் மேலும் தெரிவித்தாவது, தமிழர்தாயகப் பகுதிகளில் அரசுடன் இணைந்து செயலாற்றுகின்ற ஆயுதக் குழுக்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் மூலம் ஆயு தக் குழுக்களின் செயற்பாடுகள் மேலும் அம்பலமாகியுள்ளன. இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் பொறுப்புள்ள அமைச்சர்கள் வெளியிட்டு வருகின்ற பெறுப்பற்ற பேச்சுக்கள் ஜெனீவாவில் நடைபெறவிருக் கின்ற பேச்சுக்களையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

இது மட்டுமல்லாது வடக்கு-கிழக் குப் பகுதிகளில் கூட படையினர் தொடர்ந்து மேற் கொண்டு வருகின்ற சுற்றிவளைப்புக்கள் , அடையாள அட்டை பரிசோதனைகள், கெடுபிடிகள் என்பன மக்களின் இயல்பு வாழ்வில் பெரிதும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இவை தொடர்பிலான பல முறைப்பாடுகள் எமது செயலகத்தில் கிடைத்திருக்கின்றன. இந்த விசாரணைகள் தொடர்பாக நாம் இலங்கையில் இருக்கின்ற அனைத்து மனித உரிமைகள் செயலகத்துடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டுவருகின்றோம் என்றார்.

குறிப்பாக தமிழ் மீனவர்களுக்கு கெடுபிடிகளை ஏற்படுத்தி சிங்கள மீனவர் களுக்கு அதே பகுதியில்கடற்படைத்தரப்பு சில சலுகைகளை வழங்கி வருவதானது மிகப் பெரிய மனித உரிமை மீறலாகும். அத்துடன் திருகோண மலையில் பல சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழ் மீனவர்களின் நடவடிக்கைகளை முடக் கும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா கடற்படைத்தரப்பு ஈடுபட்டுவருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை நமது செயலகம் முழுமையாக கண்காணிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (து)

# நினைவலையில் ஆண்டு 13



# இ.ச. பேரம்பலம்

**ஸ்தாபகர் இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

## திதி.09.02.2006 வியாழக்கிழமை

காரை நகர் தனில் தோன்றி யாழ். நகரில்
சங்கமித்த எங்கள் ஐயாவே!
தோற்றங்கள் மறைந்தாலும் துயரமோ மறையவில்லை
காலங்கள் கரைந்தாலும் கவலைகள் ஆறவில்லை
ஆயிரம் உறவுண்டு ஆனால்
தந்தை என்ற சொல்லுக்கு யாருமில்லை ஐயா
பாசத்தின் உறைவிடமாய் எங்களுக்கு
நல்வழி காட்டியவரே!
பெருந்துயர் வந்து பதின் மூன்று ஆண்டுகள் போனதையா
ஏணியாய் இருந்து எம்மை ஏற்றத்தில்
ஏற்றி வைத்தீர்கள் ஐயாவே!
என்றும் உங்கள் நினைவலைகளோடு
வாழ்கின்றோம் ஐயாவே!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மணி ஓசை
கோவில் வீதி
நல்லூர்

**குடும்பத்தினர்**

(C/அ/148)

# புனர்வாழ்வுக் கழக பணியாளர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

## கிண்ணியா உலமாசபை வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் கடத்தப்பட்டமை கண்டிக்கத்தக்கது. அதே வேளை இத்தகைய செயல் சமாதானத்தைப்பாதிக்கும் எனக் கிண்ணியா ஜம் இய்யதுல் உலமா சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த நான்கு ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வந்த அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கை செயலிழந்து மீண்டும் யுத்தம் தொடங்கிவிடுமோ என்ற அச்சத்தோடும் கவலையோடும் மக்கள் இருந்தவேளை இறைவனின் உதவியால் சமாதானக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதையிட்டு மக்கள் மிக்க மகிழ்ச்சியடைகின்றனர்.

சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் இருக்கும் நிலையில் அண்மைக் காலமாக எமது நாட்டில் குறிப்பாக வடக்கு கிழக்கில் நடைபெற்றுவந்த கொலைகளும், ஆட்கடத்தல்களும் ஒழிக்கப்பட்டு அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும், ஜெனிவாவில் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர இணக்கப்பாட்டுக்கு வந்ததையிட்டு கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா இரு தரப் பினருக்கும் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

அதேவேளை ஒருவர் இன்னொருவர் மீது ஒரு குழு மற்றைய குழு மீது அல்லது ஒரு சமூகம் மற்றைய சமூகத்தினர் மீது பழிவாங்கல்களை மேற்கொள்வது மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட செயலாகும்.

அவ்வாறான செயல்களில் ஈடுபடாது மனித நேயத்தைக் கருதி ஒருவர் மற்றவரை தனது உடன்பிறந்த சகோதரனாகக் கருதி சமாதான சகவாழ்வொடு வாழவேண்டும். அதற்காக சகலரும் உழைக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட சகலரையும் கிண்ணியா ஜம்இய்யதுல் உலமா அன்பாக வேண்டிக்கொள்கின்றது.

சமீபத்தில் பயிற்சிநெறி ஒன்றக்காக மட்டக்களப்பில் இருந்து வவுனியா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த தமிழர் புனர் வாழ்வுக்கழக ஊழியர்களில் ஐவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டமை சமாதானத்திற்குக் குந்தகத்தை ஏற்படுத்தும் செயலாகும். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நாட்டில் இனமத பேதங்களுக்கு அப்பால் சகல மக்களுக்கும் தொண்டாற்றிவரும் ஒரு நிறுவனமாகும்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பின்னர் அதன் பணிகள் மேலும் விரிவடைந்துள்ளது.

வடகிழக்கு மாகாணத்தில் சகல மாவட்டங்களிலும் குறிப்பாக கிண்ணியா பிரதேசத்திலும் அதன் பணிகள் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆழிப்பேரலைத்தாக்க நிவாரண பணிகள் மீள் கட்டுமாணப்பணிகள் என பல செயற்திட்டங்கள் மேற்படி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை அதன் ஊழியர்கள் அச்சுறுத்தப்படல், கடத்தப்படல் போன்ற செயல்கள் பாதிக்கப்பட்டமக்களுக்குக் கிடைக்க வேண்டிய சேவைகளைத் தடுத்து விடும் நிலையை உருவாக்கிவிடலாம்.

எனவே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணிகள் சகல இனமக்களுக்கும் தொடர்ந்து கிடைக்க நாம் இறைவனைப் பிராத்திப் பதுடன், கடத்தப்பட்டவர்களை விடுவித்து சமாதான முன்னெடுப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சம்பந்தப்பட்டோரை கிண்ணியா ஜம்இய்யதுல் உலமா கண்ணியமாக வேண்டி நிற்கின்றது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## மீள் கட்டுமானப்பணி அலுவலகம் திறப்பு

வடமராட்சி பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கருதி வடமராட்சி பிரதேச செயலகத்தினால் புலோலி மெ.மி. பாடசாலைக்கு முன்பாக மீள்கட்டுமானப் பணி அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்துதல், மீளக்கட்டுதல் போன்றவற்றை நிர்வாகிப்பதற்கும் நிவாரணம் சம்மந்தமான சகல விடயங்களையும் கையாளவும் இவ் அலுவலகம் நடவடிக்கை எடுத்துவரு கிறது.

(க-35)

# செம்பிறைச் சங்கத்தின் மூலம் 1250 வீடுகள் நிர்மாணம்

சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட கிழக்கு தெற்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஆயிரத்து 250 விடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் செம்பிறைச் சங்கம் முன்வந்துள்ளது.

400 வீடுகள் காலி மாவட்டத்திலும் 850 வீடுகள் அம்பாறை மாவட்டத்திலும் நிர் மாணிக்கப்படவுள்ளன.

இவற்றை நிர்மாணிப்பதற்கென ஏழு கோடியே 50 இலட்சம் ரூபாவை ஐக்கிய அரபு இராச்சியத்தின் செம்பிறைச் சங்கம் வழங்கவுள்ளது என சங்கப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும் உணவுப் பொருட்களையும் செம்பிறைச் சங்கம் வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

# மாமனிதர் ஜோசப்பின் நினைவேந்தல் நிகழ்வு

## பிரித்தானியாவில்







பிரித்தானியாவின் மான் செஸ்டர் நகரில் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

மான்செஸ்டர் மாநகர சபை மண்டபத்தில் உள்ள லோர்ட் மேயர் பார்லரில் நடைபெற்ற இந்நிகழ்வு தமிழர் மனித உரிமை மையம் மற்றும் மான்செஸ்டரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் இலங்கையின் அரச பயங்கர வாதத்துக்கு எதிரான பிரசார இயக்கம் ஆகியவற்றின் சார்பில் நடத்தப்பட்டது.

நிகழ்வின் தொடக்கத்தில் ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் ஒருநிமிட நேரம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. அதன் பின்னர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படத்துக்கு அவரது மகன் டேவிட் ஜோசப் மற்றும் அவரது துணைவியார் ஆகியோர் மலர் மாலை அணிவித்து சுடரேற்றினர். அதன் பின்னர் நிகழ்வில் பங்கேற்றோர் அனைவரும் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு மலர் தூவி அகவணக்கம் செலுத்தினர்.

தமிழர் மனித உரிமை மையத்தின் சர்வதேச செயற் திட்ட இயக்குநர் டெய்டர் மெக்கொன்னெல் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய கல்வியாளர்கள், அரசியலாளர்கள், சட்டத்தரணிகள், மதப்பிரதிநிதிகள், தொண்டர் அமைப்பினர், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கோரமான படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்தனர்.

தமிழர் மனித உரிமை மையத்தின் சர்வதேச செயற்திட்ட இயக்குநர் டெய்டர் மெக்கொன் னெல் தொடக்க வுரையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவர் பரராஜசிங்கம். தமிழீழத்திலும் மட்டக்களப்பு நகரிலும் அரச படைகளின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தியவர். அவரது முறைப்பாடுகள் எதற்கும் தீர்வு காணப்படவில்லை. ஆகையால் அரசபடைகளின் மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் ஜோசப் பரராஜசிங்கம்.

ஜோசப் பரராஜசிங்கம் உள்ளிட்ட பல மனித உரிமை பாது காவலர்களை அரசாங்கம் படுகொலை செய்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

லூத கிங்க இறையியல் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் ரிச்சர்ட் கிட் தனது இரங்கல் உரையில், தென்னாபிரிக்காவிலும், எல் சவடோரிலும் அரசாங்கங்களால் மக்கள் ஒடுக்கப்பட்டதைப் போல இலங்கையில் தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றனர் என்றார்.

வேல்ஸ் தேசிய கட்சியின் பிரதிநிதி மெக் எல்லிஸ் தனது இரங்கல் உரையில் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு தமது அரசியல் கட்சி கடும் கண்டனம் தெரிவிப்பதாக வேல்ஸ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் தெரிவித்தார்.

தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளர் எஸ். வி.கிருபாகரன் தனது உரையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திடம் கொண்டு சேர்த்தவர் ஜோசப் பரராஜசிங்கம். சிறிலங் கா அரசாங்கமும் அதனது முகாமையாளர்களுமே ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்குக்கார ணமானவர்கள் என்று குற்றம் சாட்டினார்.

இலங்கைத் தீவின் இனப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங் கள் என்ன என்பதையும் கிருபாகரன் விளக்கினார். பிபிசி-04 வானொலி யின் ‘இன்றைய நாள் சிந்தனை’ என்ற நிகழ்ச்சியை வழங்கிவரும் கேப்ரியல் கோக்ஸ் அம்மையார் நெஞ்சைத் தொடும் சில கவிதைகளை வாசித்தார்.

அதன் பின்னர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மகன் டேவிட் ஜோசப் உரையாற்றினார். தனது தந்தையார் பற்றிய நினைவுகளைப்பகிர்ந்து கொண்ட டேவிட் ஜோசப் தந்தையார் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுகளையும் விவரித்தார்.

தந்தையாரின் படுகொலைக் குப் பின்னரும் கொலையாளிகள் தமது குடும்பத்தாருக்கு விடுத்த அச்சுறுத்தல்கள், தந்தையாரின் இறுதி நிகழ்வில் பங்கேற்கச் சென்ற பொதுமக்களையும் கொலையாளிகள் அச்சுறுத்தியமை ஆகியவற்றையும் டேவிட் ஜோசப் விவரித்தார்.

இருந்தபோதும் இந்த அச்சுறுத்தல்களைப் பொருட்படுத் தாமல் தமிழீழத்தின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் தமது தந்தையாரின் இறுதி நிகழ்வில் தமிழ் மக்கள் பங்கேற்றனர் என்றும் டேவி ஜோசப் கூறினார். ஜோசப் பரராஜசிங் கத்தைப் படுகொலை செய்தகொலையாளிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுத் தெரிவித்த பின்னரும் கொலை யாளிகளை நீதியின் முன்னிலையில் நிறுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

(தி)

## விண்ணப்பம் கோரல்

(ஊர்காவற்றுறை)

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட புலோலி சைவ பிரகாசவித்தியாலய அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கு அதிபர் தரம் 2 அல்லது 3 உடையவர்களும், ஆசிரியர் தரம் 1 அல்லது 2:1 அல்லது 2:2 உடையவர்களும் விண்ணப்பிக்க முடியும் என வடமராட்சி கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-101)

## ஆசிரியர்களுக்கு தங்குமிட விடுதி

வடக்குக் கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்புத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி ஆசிரியர்களுக்கான தங்குமிட விடுதிகள் அமைக்கப்பட்டுவருவதாகத் திட்டப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

கொத்தணி அடிப்படையிலான இந்த ஆசிரியர் தங்குமிட விடுதி 56 இலட்சம் ரூபா செலவில் கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட வருவதாகவும், வாகரைக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 17 பாடசாலைகளில் கடமையாற்றும் வெளிப்பிரதேசங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் நலன் கருதி இவ்விடுதிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இப்பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இப்பிரதேசப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற் றம் செய்துமாணவர்களுக்கான சிறந்த கல்வியை வழங்கமுடியும் எனக் கல்வித் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (க)

## வாராந்த நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும்.

(க-35)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் வாழ்க்கை தேர்ச்சி பாடத்திற்கான கற்பித்தல் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்களையும் இச் செயலமர்வில் பங்குபற்றுமாறும், இவர்கள் தம்முடன் கைந்நூல், பாடத்திட்டம் என்பனவற்றையும் எடுத்து வருமாறு வலயப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் கேட்டுள்ளார்.

(த-108)

## மண்டபம் திறப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினால் ஒரு இலட்சத்து 89ஆயிரம் ரூபா செலவில் வைத்தியசாலையில் அமைக்கப்பட் நோயாளரின் உதவி ஆட்கள் தங்கும் மண்டபம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.பிராந்திய பிரதி சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வைபவம் மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. (க-35)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10.00 மணிப் பூசை நிறைவுற்றதும் ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்னும் விடயம் பற்றி தா.சண்முகநாதன் சொற் பொழிவு ஆற்றுவார்.

(க-35)

# வயதானால் கோபம் குறையுமா?



கோபம் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். அதற்காக குழந்தைப் பருவத்தில் கடுமையாக கோபப் படுபவர்கள், வயது வந்த பருவத்திலும் அதேபோன்று இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதாவது, பொதுவாக வயதாக வயதாக கோபம் குறைந்து கொண்டே போகும் என்பது மருத்துவர்கள் கூற்று.

7 முதல் 11 வயது வரையிலான குழந்தைகளைக் எடுத்துக் கொண்டால்,

1. பெண் குழந்தைகளைக் காட்டிலும் ஆண்கள் அடிக்கடி கோபப்படுகிறார்கள்.

2. குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் அதிகமாக கோபப்படுகிறார்கள். அல்லது அதற்காக சீக்கிரம் தூண்டப்படுகிறார்கள்.

3. வயது ஏற ஏற கோபம் குறையத் தொடங்கும்.

20 முதல் 30 வயது வரையிலான வயது வந்த மனிதர்களில்,

1. ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகமாக கோபப்படுகிறார்களாம்.

2. 30 வயதில் வாழ்க்கைத் துணையுடன் வசிப்பவர்களுடன் ஒப்பிடும் போது, தனியாக வசிப்பவர்கள் கூடுதலாக கோபப்படுகிறார்கள்.

அதாவது கோபத்தைப் பொறுத்தமட்டில் 20 வயதைப் போல 30 வயது இருப்பதில்லை. எனினும் அபூர்வமான சிலர் 20 வயதில் இருப்பதைக் காட்டிலும் 30இல் ஆவேச மூர்த்திகளாக இருப்பதுண்டு.

குழந்தைப் பருவத்தில் கோபப்படுவதால் உடல்நலம் பாதிப்பதாக தெரியவில்லை. அதேசமயம் வயது வந்த பருவத்தில் கோபப்பட்டால் அது பல்வேறு உடல் நலக் குறைவுகளை உண்டு பண்ணும் வாய்ப்பு உள்ளது.

சிலர் இருக்கிறார்கள், குழந்தைப் பருவமானாலும் சரி, வயது வந்த பருவமானாலும் சரி, அவ்வளவு ஏன்? முதுமைப் பருவத்திலும் சரி, ருத்திர மூர்த்திகளாகவே இருக்கிறார்கள். மிகவும் அபூர்வமான இத்தகைய நபர்கள் கோபத்தை குறைத்துக் கொள்ள அதற்குரிய பயிற்சிகளை எடுத்துத்தான் ஆக வேண்டும்.

# முதியோருக்கு தூக்கத்தின் அளவு குறைவது ஏன்?




பொதுவாக வீட்டில் ஓய்வாக இருக்கும் முதியவர்கள் பெரும்பாலும் பகலில் தூங்கி விடுகிறார்கள். இதனால் அவர்களது இரவு நேரத் தூக்கத்தின் அளவு பாதிக்கப்படுகிறது.

அவர்கள் பகலில் அரை மணி நேரத்திற்கு மேல் தூங்கக் கூடாது. சில முதியவர்கள் மூச்சிரைப்பு, ஆஸ்துமா போன்றவற்றாலும் போதிய தூக்கம் வராமல் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் தினசரி காலையிலும் மாலையிலும் நடைபயிற்சி மேற்கொள்வது நல்லது. காலையில் நல்ல சிற்றுண்டி, மதியம் நிதானமான உணவு, இரவில் சிறிது சிற்றுண்டி என்று சாப்பிட்டு வர வேண்டும். இரவு சாப்பிட்ட பிறகு சிறிது தூரம் நடந்து சென்று வருவது நல்லது.

ஒவ்வொரு முறையும் சாப்பாட்டிற்கும் தூக்கத்திற்கும் இடையே குறைந்தது 2மணி நேரமாவது இடைவெளி வேண்டும். இரவு சிறிதளவு தேன் சேர்த்து சூடான பால் குடித்து விட்டு பின்னர் தூங்கச் செல்வதும் நன்கு தூக்கத்தை வரவழைக்கும்.

# அல்சீமர் ஒரு மரபியல் வியாதி

அல்சீமர் எனப்படும் மூளை நோய் ஒரு மரபியல் வியாதி என்று உளவியல் அறிஞர் டாக்டர் மார்க்ரெட் காட்ஸ் தெரிவித்தார்.



சுவீடனை சேர்ந்த 12000 இரட்டையர்களின் மருத்துவ அறிக்கைகளை விரிவாக ஆய்வு செய்தபோது 80 சதவீதம் பேருக்கு அல்சீமர் பாதிப்பு இருந்தது தெரியவந்தது. இதன் மூலம் இரத்த சம்பந்தமுள்ள நெருங்கிய உறவினர்களில் யாருக்காவது அல்மசீர் இருந்தால் குறிப்பிட்ட நபருக்கு அல்மசீர் வருவதற்கு நிறைய வாய்ப்புகள் இருப்பதாக அவர் கூறினார்.

அதே சமயம் அல்சீமருக்கு மரபியல் பண்புகள் மட்டுமே காரணமென்றால் ஒரே பிரசவத்தில் பிறந்த இரட்டையருக்கு அல்சீமர் இருந்தாக வேண்டும். ஆனால் டாக்டர் மார்க்ரெட்டின் ஆய்வில் ஒரு குழந்தை அல்சீமர் இருந்தால் இன்னொரு குழந்தை 16 ஆண்டுகள் கழித்துத்தான் அல்சீமர் தென்பட்டது. ஆச்சரியம் தரும் இந்த இடைவெளிக்கு சுற்றுப் புறச் சூழல்தான் காரணம் என்று டாக்டர் மார்க்ரெட் தெரிவித்தார்.

சுற்றுப்புறச் சூழ்நிலையில் உண்டாகும் மாற்றங்கள், வாழ்க்கை முறை ஆகியவையும் காரணங்கள்தான். ஆனால் மரபணுக்களின் அளவுக்கு இவை பெரிய பாதிப்பை உண்டு பண்ணுவதில்லை. உதாரணத்துக்கு மரபணுக்கள் 80சதவீதம் காரணமென்றால் சுற்றுப் புறச் சூழல் 20 சதவீதம்தான் காரணமாக உள்ளது அதேசமயம் இரண்டுமே ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்பில் உள்ளன.

அல்சீமர் மூளை செல்களை கொஞ்சம் கொஞ்சமாக செயலிழக்க செய்யும். இதனால் நாளடைவில் மூளையின் ஒட்டுமொத்த செயல் திறனும் கேள்விக்குறியாகும் என்பதால் இதனால் நாளடைவில் மூளை யின் ஒட்டுமொத்த செயல் திறனும் கேள்விக் குறியாகும் என்பதால் உடல் இயக்கம் பாதிக்கப்பட்டு உயிரிப்பு நேரிடும்.




# சமைத்த உணவை மீண்டும் சூடாக்கினால் சத்து குறையும்!

சிலர் சமைத்த உணவை சில மணி நேரங்கள் கழித்து மீண்டும் சூடாக்கிச் சாப்பிட்டால் கிருமிகள் தாக்காது உணவும் சூடாக இருக்கும் என்று நினைக்கின்றனர். ஆனால் அப்படிச் சாப்பிடும் உணவில் சத்து மிகவும் குறைந்து விடும் என்கின்றனர்.



எந்த உணவையும் சூடு ஆறுவதற்கு முன்பே சாப்பிடுவதுதான் நல்லது. அப்போதுதான் அதில் இருக்கும் சத்தினை நாம் முழுமையாகப் பெற முடியும். அதே போல் ஆரஞ்சுப் பழச்சாறை மிக்ஸியில் போட்டுத் தயாரிக்கும் போது அதில் இருக்கும் நொதிகளும் சத்துக்களும் உருக் குலைந்து போய்விடும்.

அதனால் பழத்தில் இருக்கும் முழுச் சத்தினையும் பெற முடியாமல் போகிறது. மேலும் பழச்சாறு சீக்கிரம் கெட்டும் போகும். பழச்சாறுகளை பிழிந்தவுடன் குடித்து விடுவது நல்லது. குளிர்சாதனப் பெட்டியில் வைத்து குடித்தால் சத்துக்கள் சிறிதளவு அழிந்து விடக்கூடும்.

# வாய்ப்புண் எதனால் வருகிறது?



அலோபதி மருந்து மாத்திரைகளை அதிகளவில் சேர்த்துக் கொள்வதனால்தான் உடல் சூடாகி வாய்ப்புண் வருகிறது என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அது சரியான கருத்து இல்லை என டாக்டர்கள் கூறுகின்றனர்.

பொதுவாக ஆண்டிபயோடிக்ஸ் என்று அழைக்கப் படுகின்ற நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை அளவுக் கதிகமாக சேர்த்துக் கொள்ளும்போது குடலிலும் வாயிலும் புண் வருகிறது.

ஆண்டிபயோடிக்ஸ் மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடும் போது குடலின் நன்மை செய்யும் பக்டீரியாக்கள் அழிக்கப்படுகின்றன. மேலும் அந்த இடத்தில் விற்றமின் பி தொகுப்பு உண்டாவது பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக உடலில் விற்றமின் பி தொகுப்பு குறைகிறது. இதனால்தான் வாய்ப்புண் ஏற்படுகிறது என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

பிற நோய்களுக்கான மருந்துகளைச் சாப்பிடும் போது வாய்ப்புண் ஏற்படுவதைத் தடுக்க விற்றமின் பி தொகுப்பு மற்றும் லேக்டோ பேசிலஸ் உள்ள மாத்திரைகளையும் தினம் ஒன்று வீதம் டாக்டரின் ஆலோசனைப்படி சாப்பிட்டு வருவதன் மூலம் வாய்ப்புண் ஏற்படாமல் தடுக்க முடியும்.

# எலும்பு வளர்ச்சிக்கு கல்சியச்சத்து அவசியம்



எலும்புகள் மற்றும் பற்கள் வலுவாக இருக்க கல்சியச்சத்து மிகவும் அவ சியம் ஆனால் தற்போது பெரும்பாலான குழந்தைகளுக்கு கல்சியச சத்துக் குறைவாக உள்ளது.

சின்ன வயதில் இப்படி காணப்படும் குழந்தைகள், வயது வந்த பருவத்தில் எலும்பு முறிவுகளுக்கு எளிதாக ஆளாகிறார்கள். லேசாக அடிபட்டால் கூட கை - கால் மற்றும இடுப்பு எலும்புகள் முறிந்துபோகும். ஒஸடியோபோரோசிஸ் எனப்படும் எலும்புநோய எளிதாக தாக்கும் வாய்ப்பு உள்ளது.

குழந்தைப் பருவத்தில் முதல் 2 வயதில் தாய்ப்பால் மூலம் கல்சியம் சத்து கிடைக்கிறது. ஆனால் என்ன மாதிரியான உணவுகளை சாப்பிடுகிறார்கள் என்பதைப் பொறுததே கல்சியச்சத்து கிடைக்கிறது. பண்ணைப் பொருட்கள் மூலம் கல்சியம் சத்து தாராளமாக கிடைக்கும் என்று கருத்து உள்ளது. ஆனால் காலி பிளவர் போன்ற காய்கறிகளுடன் ஒப்பிடும்போது பண்ணைப் பொருட்கள் பெரிய விஷயமே அல்ல. இதனால் சின்ன வயதிலிருந்தே குழந்தைகளை காய்கறிகளை விரும்பிச் சாப்பிட பழக்க வேண்டும்.

கால்பந்து, கைப்பந்து, கபடி, ஓட்டம், நீச்சல் போன்ற விளையாட்டுகள் மூலம் கல்சியம சத்து அதிகரித்து, எலும்புகளும் வலுவாகும்.

ஆனால் பெண் குழந்தைகளாக இருககும் பட்சத்தில், பூப்பெய்திய பிறகு மாதவிலக்கு மூலம் கல்சியம் இழப்பு உண்டாகும். இதற்கு கல்சியம் சத்து மாத்திரைகள் மூலம் இழப்பை ஈடுகட்டலாம். அதே சமயம் என்னதான் கல்சியம் சத்து மாத்திரைகளை சாப்பிட்டாலும் விற்றமின் டி சத்து போதுமான அளவுக்கு இருக்க வேண்டும். ஏனெனில் நம்முடைய உடம்பு கல்சியம் சத்தை எளிதாக ஈர்த்துக்கொள்ள, விற்றமின டி தான் வகை செய்கிறது என்பது குறிபபிடத்தக்கது.

இந்நிலையில் குழந்தைகளுக்கு எவ்வளவு கல்சியம் சத்து தேவை என்பது பற்றி மருத்துவர்கள் உடனடியாக ஒரு கொள்கையை வரையறை செய்வது அவசியம் ஆகும.

# கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்!

## தமிழர் உரிமைப் போராட்டத்தை நசுக்கப் பின்னப்பட்ட சூழ்ச்சி வலை

(தொடர்ச்சி)

### உதித்தது ஒரு 'குழு'

அதுதான் கருணா தலைமையிலான குழு. இந்தக் குழுவை உருவாக்கியது இலங்கை அரசுதான் என்பதற்கு சான்றுகள் உண்டு. "பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகளை பங்கேற்க வைத்ததன் மூலம் அவர்களை சர்வதேச வலையில் சிக்கவைத்து விட்டோம் - அமைதிப் பேச்சுவார்த்தையின் ஊடாக கருணா தலைமையில் புதிய ஆயுதக் குழுவை விடு



தலைப்புலிகளுக்கு எதிராக நாங்கள்தான் உருவாக்கினோம்". இப்படி வெளிப்படையாக சிங்கள் வாக்காளர் முன் சென்று மார்தட்டினார், ரணில் விக்கிரம கட்சியைக் சார்ந்த நவீன் திசநாயக்க! இவர் 94ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் சந்திரிகாவை எதிர்த்து ரணில் கட்சி சார்பாக அதிபர் பதவிக்கு நிறுத்தப்பட்ட வேட்பாளர் காமினி திசநாயக்கவின் மகன்.

நவீன் திசநாயக்க - இப்படி ஒரு கருத்தை வெளியிட்டதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெய்லி மிர்ரர்' ஆங்கில நாளேடு, இந்தச் செய்தி உண்மைதானா என்பதை உறுதிப்படுத்த நினைத்தது. ரணில் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவரும், விடுதலைப்புலிகளுடன் நடந்த பேச்சுவார்த்தையில் பங்கு பெற்றுவந்தவருமான மிலிந்த மொரகொட என்பவரைப் பேட்டி கண்டது.

"ஆம் உண்மைதான். கருணா தலைமையிலான ஆயுதக் குழுவை உருவாக்கியதே நாங்கள்தான்" என்று பேட்டியில் அவர் ஒப்புக்கொண்டார்.

இந்த ஆயுதக் குழுக்களை இலங்கை இராணுவம் பயன்படுத்திக் கொண்டதற்கும் சான்றுகள் உண்டு. பின்லாந்து, அயர்லாந்து, நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெறாத நாடுகள்) பிரதிநிதிகள் அடங்கிய ,போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு' ஒன்று உருவாக்கப்பட்டு, அது இலங்கையில் நிலைமைகளைக் கண்காணித்து வருகிறது.

இந்த நிலையில் கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில நாளேடு, 'தீவுச்சேனை' என்ற பகுதியில் கருணா மற்றும் ஈ.என்.டி.எல்.எப் குழுக்கள் ஆயுதங்களோடு முகாமிட்டிருக்கின்றன என்ற செய்தியை வெளியிட்டது. இது உண்மைதானா என்பதைக் கண்டறிய சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்ட போது, அந்தச் செய்தி உண்மைதான் என்பதை உறுதிப்படுத்தியது. அது மட்டுமல்ல, சிங்கள இராணுவ முகாம்களுக்கு அருகருகே உடனுக்குடன் தொடர்புகொண்டு செயற்படும் வகையில் இந்த ஆயுதக் குழுக்களின் முகாம்கள் இருக்கின்றன என்பதையும் அம்பலப்படுத்தியது.

ஆயுதக் குழுக்களிடமிருந்து ஒப்பந்தப்படி ஆயுதங்களைப் பறிமுதல் செய்யவேண்டிய இலங்கை இராணுவம், அதற்கு மாறாக, ஆயுதக் குழுக்களைத் தனது தாக்குதலுக்குப் பயன்படுத்திக் கொண்டு வந்தது என்ற உண்மை சர்வதேச குழுக்கள் மூலம் வெளிச்சத்துக்கு வந்தது எனில் ஒப்பந்தத்தை மீறியது யார்?

இந்த நிலைமை தொடர்ந்த போதுதான் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தனர். தேர்தல் களத்திலும் எந்தக் கட்சியையும் ஆதரிக்காத நிலை எடுத்தனர். தமிழர்களும் தேர்தலை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்தனர்.

சந்திரிகாவின் கட்சியைச் சார்ந்த ராஜபக்ஷ சிங்களத் தீவிரவாத அமைப்பான ஜே.வி.பி ஆதரவோடு அதிபர் பதவிக்கு வந்தார். "பேச்சு வார்த்தைக்கான திட்டங்களை மாற்றி அமைப்பேன் - நோர்வேயில் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம்- ஆசியாவில் ஏதாவது ஒரு நாட்டில்தான் நடக்கவேண்டும் - கூட்டாட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை - இலங்கையின் ஒற்றையாட்சிக்குக் கீழ்தான் எந்தத் தீர்வையும் எடுப்போம்" என்று ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அவர் வீர முழக்கமிட்டார்.



நோர்வேக்கு எதிராக ஜே.வி.பி போன்ற சிங்கள தீவிரவாதிகள் போர்க்கொடி உயர்த்தினர்.

ராஜீவ் காந்தி - ஜே.ஆர் ஒப்பந்தத்திலே தமிழ்ப் பகுதிகளுக்காக தனி மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு, இந்தியாவின் பொம்மை ஆட்சி ஒன்று ஈழத்தில் அமைக்கப்பட்ட வரலாற்றை மறந்திருக்க முடியாது.

இப்படி பல்வேறு காலகட்டங்களைத் தாண்டி வந்த ஈழத் தமிழர் பிரச்சினையை மீண்டும் தொடக்க கால கட்டத்துக்கே



கொண்டுபோகும் திட்டங்களையே ராஜபக்ஷ முன்வைத்தார். இந்த நிலையிலும் கூட - 'இந்து' நாளேடு உட்பட பார்ப்பன ஊடகங்கள், ராஜபக்ஷவை உயர்த்திப் பிடித்து விடுதலைப் புலிகளுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் எதிராகப் பிரசாரத்தை ஊதிவிட்டன.

சமரச சதிவலைகள் ஊடாக தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுப்பதற்கு பல்வேறு காலகட்டங்களில் அமெரிக்காவும், இந்திய ஆட்சியும் ஆயுதம், ஆயுதப் பயிற்சி போன்ற உதவிகளை வழங்கி இலங்கை அரசுக்கு முட்டுக்கொடுக்க முன்வந்தன.

இவ்வளவுக்குப் பிறகு சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக விடுதலைப் புலிகளும், இலங்கை அரசும் இணைந்து 'சுனாமி பேரலை நிவாரணக் கட்டமைப்பு' என்ற அமைப்பை உருவாக்கினர்.

நிதி உதவி வழங்கிய சர்வதேச நாடுகளின் வலியுறுத்தலால் உருவான இந்த அமைப்பை இந்தியாவும் அங்கீகரித்தது. இதன்படி தமிழீழப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச நாடுகள் வழங்க முன்வந்த நிவாரண உதவிகள்- விடுதலைப்புலிகள் மூலமாகவே வழங்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதற்குப் பிறகு, இலங்கை நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து நீதிமன்றத்தின் மூலம் விடுதலைப்புலிகள் பங்கேற்பதைத் தடுத்துவிட்டார்கள். அந்தக் காலகட்டத்திலும் 'இந்து' உட்பட பார்ப்பன ஊடகங்கள் விடுதலைப்புலிகளைக் குற்றம் சாட்டியே பிரசாரம் செய்தன.

ஆனால் பிரச்சினைகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் சர்வதேச பார்வையாளர்களிடம் இந்தப் பொய்ப் பிரசாரங்கள் எடுபடவில்லை.

இலங்கை ஆட்சிகளின் திட்டமிட்ட திசை திருப்பும் சூழ்ச்சிகளை, சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளத் துவங்கிவிட்டது.

### நிபந்தனையற்ற சரணாகதி

நோர்வே பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற சிங்கள வெறியர்களின் கூப்பாடு தோல்வி அடைந்து மீண்டும் நோர்வே பேச்சுவார்த்தைகளை இப்போது முன்னெடுக்கிறது.

ஆசிய நாடுகளில்தான் பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்த ராஜபக்ஷ- இப்போது அதற்கு மாறாக சுவிற்சர்லாந்து நாட்டிலே ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடப்பதற்கு ஒப்புக் கொண்டு விட்டார். இந்தியாவின் ஆதரவோடு ஈழத் தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்கிவிடலாம் என்று திட்டமிட்ட ராஜபக்ஷவின் தந்திரங்கள் படு தோல்வி அடைந்துவிட்டன. நியாயம் புலிகள் பக்கமே என்பது இப்போது அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

ராஜபக்ஷவின் இந்திய வருகையால் மீண்டும் தமிழகத்தில் ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான ஆதரவு எழுச்சி பெற்றுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், ராஜபக்ஷவின் சந்திப்பு முயற்சிக்கு ஆதரவு காட்டவில்லை. ராஜபக்ஷவைப் பயன்படுத்தி, இந்தியாவுக்கு நிர்ப்பந்தம் தந்து, விடுதலைப்புலிகளை ஒழித்து விடலாம் என்ற கற்பனைக் கனவில் மகிழ்ச்சிக் கூத்தாடிய 'இந்து' போன்ற பார்ப்பன ஊடகங்கள்- கட்டுரைகளும், தலையங்கங்களும்



எழுதிக் குவித்தும், தூதுகள் அனுப்பியும் தங்களது சதித் திட்டங்கள் தோற்றுப்போய் விட்டனவே என்று ஏமாந்து நிற்கின்றன!

அவர்கள் அடுத்த சதித் திட்டத்துக்கு

**இணையப்பார்வை**

காய் நகர்த்தி வருகிறார்கள். அடுத்து ஜெனீவா பேச்சுவார்த்தையையும் நடக்க விடாமல் சதி முயற்சிகள் தொடருமா? கடந்த கால அனுபவங்களிலிருந்து இந்த ஆதிக்க சக்திகள் பாடங்களைப் பெறுவார்களா? இக்கேள்விக்கான விடைகள் இனிமேல்தான் தெரியும்.

மக்கள் சக்தியோடு நடத்தப்படும் உண்மையான விடுதலைப் போராட்டங்களைத் தொடர்ந்து ஒடுக்கிவிட முடியாது என்பது மட்டும் உறுதி! ▯

# கைவிடப்பட்ட நிலையில் பெண்குழந்தை

(துன்னாலை)

வைத்தியசாலைக்கு குழந்தையை பிரசவிப்பதற்காக வந்த தாய் ஒருவர் குழந்தையை பிரசவித்துவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பொலிகண்டி பகுதியைச் சேர்ந்த இளம் குடும்ப பெண் ஒருவர் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பிரசவத்தின் போது பெண்குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

குழந்தை பிறந்த சில மணித்தியாலங்களில் தாயார் மாயமாக மறைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் கதிரவேற்பிள்ளை பருத்தித்துறை நீதிமன்றுக்கு முறையிட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய குறித்த யுவதியைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர்.

கைவிடப்பட்ட பெண்குழந்தை வைத்தியசாலையினரின் பராமரிப்பில் தற்போது உள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவத்தில் தொடர்புபட்ட தாயாரின் கணவர் இந்தியாவில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(க-101)

# தற்காப்புப் பயிற்சி

(கிளிநொச்சி)

பெண்களுக்கான தற்காப்புப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு கிளிநொச்சி இரத்தினபுரம் முன்பள்ளி விளையாட்டரங்கில் இரத்தினபுரம் மாதர் அபிவிருத்தி சங்கத்தினரின் ஒழுங்கமைப்பில் ஆரம்பமானது.

நிகழ்வில் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைத்தார். பயிற்சியினை ஒலிக்கலைப் பிரிவுப் போராளி சங்கவி வழங்கினார். பயிற்சியில் பெருமளவான பெண்கள் கலந்துகொண்டனர்.

(து)

# பரிசாரகர் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருந்த மூன்றாவது தொகுயினரிற்கான பரிசாரகர் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை

44 மீள்பார்வை



உண்மையிலேயே சொல்லப்போனால் தமிழ்நாட்டில் எவ்வளவு சிராமங்கள் உள்ளது என்று எனக்குது தெரியும். அந்த அளவிற்கு பட்டிதொட்டிவரை நான் சென்று காமராஜருடைய கொள்ளைகளைப் பரப்பினேன்.

ஒருவர் தன் திறமையாலும் உழைப்பாலும் மக்கள் மதிப்பை பெறுகின்ற நேரத்திலும் நன்றாக வளர்ந்து வருகின்ற நேரத்திலும் அவர்களைத் தட்டி கீழே இறக்கப்பார்ப்பார்கள். அப்போது எச்சரிக்கையாக இருந்தால்தான் அரசியலில் நிலைத்திருக்க முடியும். அதற்கு உதாரணம் அரசியலில் நிலைத்திருந்தவர் என் அண்ணன் எம்.ஜி.ஆர். அரசியலிலிருந்து தள்ளப்பட்டவன் நான்.

டி.எஸ்.என்: நீங்கள் நாடக மேடையில் திரைப்படத்திலும் மிகச் சிறப்பாக நடித்தீர்கள் ஆனால் அரசியலில் உங்களுக்கு நடிக்கத் தெரியவில்லை என்று சொல்லலாமா?

சிவாஜி: உண்மைதான்! அரசியலில் என்னைவிடப் பெரிய நடிகர்களெல்லாம் இருக்கிறார்கள் இப்பொழுது கூட அவர்கள் நன்றாக நடித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

யாராவது அழுதால் இவனும் அழுகிறான் யாராவது சிரித்தால் இவனும் சிரிக்கிறான் எனவே இவனுடைய அழுகைக்கும் சிரிப்புக்கும் தான் சிறப்பு அதற்கும் மாலை மரியாதையெல்லாம் கிடைக்கிறது.

ஆகவே, அரசியலில் யார் முந்திக் கொள்கிறார்கள் என்பதைக் கொண்டுதான் முக்கிய இடம் கிடைக்கும். என்னால் அரசியலில் நடிக்க முடியவில்லை.



தில்லானா மோகனாம்பாள் படத்தில் மனோரம்மாவுடன் ...(1968)

### கட்டபொம்மனுக்கு விருது

டி.எஸ்.என்: அரசியலில் ஒதுக்கப்பட்டாலும் நடிப்பில் உங்கள் மகத்தான சாதனையைப் பாராட்டி உங்களுக்கு நடிகர் திலகம் என்று பட்டம் தந்தார்கள் அல்லவா?

சிவாஜி: எனக்கு நடிகர் திலகம் என்ற பட்டம் பேசும் படம் பத்திரிகை மூலம் கொடுத்தார்கள். ஒரு ரசிகரால் தரப்பட்டு அதன்பின் பெரும்பான்மையான மக்கள் மற்றும் ரசிகர்கள் விரும்பிப் பாராட்டிய பட்டம் இது. இதை நான் என்றுமே மறக்கமாட்டேன்.

அந்தக் காலகட்டத்தில் 1960-என்று ஞாபகம் மற்றொரு பெரிய கௌரவத்தையும் என் நடிப்புத் தொழில் எனக்குக் கொடுத்தது. அது ஆப்பிரிக்க ஆசியத் திரைப்பட விழாவில் எனக்கு கொடுத்த கட்டபொம்மன் விருது.

கட்டப்பொம்மன் படத்தை ஆப்பிரிக்கா ஆசிய திரைப்பட விருதுக்காக தேர்வு செய்ய இந்திய அரசாங்கத்தினர் முடிவு செய்தனர். இதிலும் சில முக்கியமான ஆட்கள் நுழைந்து இந்த படம் விருதுக்கும் போகக்கூடாது என்று தடுக்க முயற்சி செய்திருக்கிறார்கள்.

வேறு ஒரு படத்தையும் நகல் எடுத்து அனுப்பினார்கள். ஆனால் கட்டப்பொம்மன் தான் தகுதி பெற்றது. என்று அதையே அனுப்பி வைக்குமாறு கூறிவிட்டார்கள். கட்டமொம்மன் படத்தில் சம்பந்தப்பட்ட முக்கியமானவர்கள் எல்லோரும் இந்த விழாவிற்காக எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவிற்குச் சென்றோம் அவர்கள் அங்கு எங்களுக்கு மரியாதை கொடுத்து வரவேற்றார்கள்.

பி.ஆர்.பந்துலு பத்மினி நான் மற்றும் சிலர் அங்கு சென்றிருந்தோம். அந்த சமயம் பத்மினியின் மெடிக்கல் ரிப்போர்ட் சரியில்லை என்று குவாரண்டைனில் பிடித்து வைத்துவிட்டார்கள். எகிப்தில் சட்டதிட்டங்கள் மிகவும் கடினமானவை. பத்மினிக்கு நான் தினமும் ஹோட்டலில் இருந்து சாப்பாடு எடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று அதன் பிறகு விழா அன்றுதான் பத்மினியை வெளியே அனுப்பினார்கள். விழா சிறப்பாக நடந்தது விழாவில் பல படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.




எம்.ஜி.ஆருடன்....


நானும் மக்களுடன் உட்கார்ந்திருக்கிறேன். அப்போது வீரபாண்டியக் கட்டப்பொம்மன் படமும் திரையிடப்பட்டது. நான் கட்டப்பொம்மனாகத் வெள்ளைக்காரனை எதிர்த்து அவமானப்படுத்தி சேரை இழுத்து உட்காரும் பொழுது தமிழ்நாட்டு மக்கள் எப்படிக் கைத்தட்டி பாராட்டினார்களோ அதுபோல் எகிப்திலும் கைத்தட்டினார்கள் அவர்களுக்கு தமிழ் தெரியாது இருந்தாலும் உணர்ச்சி வசப்பட்டு கைத்தட்டினார்கள் ஏனென்றால் அவர்களும் அந்தக் காலகட்டத்தில்தான் வெள்ளைக்கார ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றிருந்தார்கள். நாமும் வெள்ளைக்காரனைப் பற்றி சொல்லும்பொழுது அவர்கள் பட்ட கஷ்டம் அவர்களின் நினைவுக்கு வருகிறது.

எனவே இந்தப்படத்தைப்பார்த்து கைதட்டி உற்சாகமூட்டினார்கள். அங்கு உலகின் மிகப் பெரிய நடிகர்கள் எல்லாம் இருந்தார்கள். லைலா மைஜ்னு படத்தில் ஹிரோயின் மெந்தாவுக்கு பெஸ் ஹிரோயின் அவார்ட் கிடைத்தது. வீரபாண்டிய கட்டபொம்மன் படத்திற்கு பெஸ்ட்ஹீரோ அவார்ட்டும், பெஸ்ட் மீயுசிக் அவார்டும் பெஸ்ட் ஸ்ரோரி அவார்ட்டும் கிடைத்தன என்னை மேடைக்கு அழைத்தார்கள் எழுந்து சென்றேன். (தொடரும்)

# பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் திருமலையில் வழங்கப்பட்டது





புனித பிரான்சிக்கன் சகோதரர்களின் நிதி உதவியுடன் திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடு இழந்த குடும்பங்களுக்கு கிழக்கு கிராமிய அபிவிருத்தி நிறுவகம் இலுப்பைக்குளம் பகுதியில் வீட்டுத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தில் தலா 50,000 ரூபா பெறுமதியான 20 வீடுகள் மிக விரைவாகவும் சிறந்த முறையிலும் கட்டிமுடிக்கப்பட்டது. பிரான்சிக்கன் சகோதரர்களினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புனித பிரான்சிக்கன் மாகாண தலைவர் சங்கைக்குரிய சகோதரன் கிருஷ்டி திசேரா மற்றும் சகோதரர்களான ஜஸ்கஸ், மார்க்கஸ், மெல்சன், மோசஸ் ஆகியோரும் கிழக்கு கிராமிய அபிவிருத்தி நிறுவகத்தின் சார்பில் நிறுவக செயலாளர் ஜீவரெட்ணம் வெளிக்கள அதிகாரிகளான ருசேந்திரன் ரமேஷ் மற்றும் குழு உறுப்பிணர்களான மோகன், சுசாந்தன் ஆகியோரும் கலந்து சிறப் பித் தனர்.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த சகோதரர்கள் இங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் உதவிகளைப் பெற்றுத்தர முயற்சிப்பதாக தெரிவித்தனர். (த)

# 5000 பேருக்கு ஜப்பானில்— வேலை வாய்ப்பு வழங்கப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 3 மாத காலத்திற்குள் 5 ஆயிரம் பேருக்கு ஜப்பானில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க தொழில் மற்றும் தொழில் நுட்ப பயிற்சியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து அமைச்சின் அதிகாரிகள் ஜப்பானிய பிரதிநிதிகளுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தயுள்ளனர். ஜப்பானுக்கு செல்வோரை தெரிவு செய்யும் நடவடிக்கை தொழில் மற்றும் தொழில் நுட்ப அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

ஜப்பானுக்கு செல்லும் முன்பு அவர்களுக்கு ஜப்பான் மொழி தொடர்பான பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

ஜப்பானில் குறித்த தொழிலுக்கு அமர்த்தப்படும் ஒருவருக்கு அந்த தொழில் தொடர்பாக ஒரு வருட பயிற்சி அளிக்கப்படும் . பின்னர் அவர்கள் இரண்டு வருடங்கள் பணியாற்ற முடியுமென்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (க-9)

# தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் தைப்பூச திருநாளான எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் கொக்குவில் மேற்கு மந்தாரவன சந்திர சேகரப் பிள்ளயார்ஆலயத்தில் ஆலய நிர்வாகத்தினரின் அனுசரணை யுடன் அகத்திய தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருறை பாரா யணம் என்பனவற்றை நடாத்தவுள்ளது. (த)

# இந்திய வைத்தியர் மீது ஆஸி.பொலிஸார் வழக்கு

(சிட்னி)

13 நோயாளிகளை கொலை செய்ததாக இந்திய வம்சாவளி டாக்டர் மீது அவுஸ்திரேலிய பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். மனித உயிர்களை கொன்றது மற்றும் மோச்சடி குற்றச்சாட்டிற்காக, 26பிரிவுகளில் இந்திய டாக்டர் ஜெயந்த் படேல் மீது அவுஸ்திரேலிய பொலிஸார் வழக்குப் பதிவுசெய்திருக்கின்றனர்.


அவுஸ்திரேலியாவில் குவீன்ஸ்லாந்து மாகாண நீதிமன்றத்தில் (டி.பி.பி.) பொலிஸார் டாக்டர் படேலுக்கு செய்த குற்றங்கள் தொடர்பான பல ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளனர்.

4 நோயாளிகளை கொன்றது 6 நோயாளிகளின் உடல்நிலைமையை மிகவும் மோசமான நிலைக்கு கொண்டு சென்றது மற்றும் 16 மோசடிச் செயல்கள் ஆகியவற்றிற்கான ஆதாரங்கள் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டன. மேலும் 2 நோயாளிகளின் உடல் நிலைமையை மிகவும் மோசமான நிலைக்கு கொண்டு சென்றதற்கான ஆதாரங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று பொலிஸ் கமிஷனர் பாப் அட்கின்சன் தெரிவித்தார்.

இந்தியா வம்சாவளி டாக்டரான ஜெயந்த் படேல், தென்கிழக்கு குவீன்ஸ்லாந்தில் உள்ள பண்டாபெர்க் பேஸ் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவின் டைரக்டராக கடந்த இரண்டு வருடமாக பணிபுரிந்து வருகிறார். இந்த காலகட்டத்தில் மேற்படி சம்பவங்கள் நடந்துள்ளது. 13நோயாளிகளை அவர் கொன்றதாக புகார் எழுந்துள்ளது. இதனால் அவர் மரண டாக்டர் (டாக்டர் டெத்) என்றழைக்கப்படுகிறார். தவிர டாக்டர் படேல் மீது மேலும் 200 நோயாளிகளின் நிலைமையை மோசமான நிலைக்கு கொண்டுசென்றதாக குற்றச்சாட்டு உள்ளது என்றும் இது தொடர்பான புலனாய்வு நடைபெற்று வருவதாகவும் கமிஷனர் அட்கின்சன் கூறினார்.

சில புகார்கள் குறித்து நடைபெற்ற விசாரணையில் முதற்கட்டமாக சில ஆதாரங்கள் ஒப்படைக்கப்பட்டது என்றும், மேலும் பல புகார்கள் குறித்து புலனாய்வு நடைபெற்று வருவ தாகவும் கமிஷனர் அவுஸ்திரேலிய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார். முன்னதாக கடந்த வருடம் மாகாண சட்டசபையில் டாக்டர் படேலின் தகுதியின்மை குறித்து உறுப்பினர்கள் பிரச்சினையை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து டாக்டர் படேல் கடந்த வருடம் அவுஸ்திரேலியாவிலிருந்து அமெரிக்காவில் ஒரேசானில் உள்ள தனது சொந்த வீட்டிற்கு சென்று விட்டார்.

குவீன்ஸ்லாந்து மாகாண நீதிமன்றத்தில் 35,000 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை பொலிஸார் தாக்கல் செய்துள்ளனர். (கு)



துருக்கி நாட்டில் கடும் பனி பொழிகிறது இஸ்தான்புல் நகரில் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது. பனி படர்ந்த ஒரு படகில் பறவைகள் ஓய்வெடுக்கிறது.

# தென் கொரியாவில் பனிப்பொழிவு

தென்கொரியா சென்றுள்ள ஜனாதிபதி அப்துல் கலாம் அந்நாட்டில் 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ஆனால் அந்நாட்டில் கடுமையான பனிப்பொழிவு காரணமாக அவரது நிகழ்ச்சிகள் பாதிக்கப்பட்டன.

சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தென் கொரியா நாடுகளில் 10நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அப்துல் கலாம் சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் நாடுகளின் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டுதற்போது தென் கொரியா நாட்டுக்கு சென்றுள்ளார்.

அங்கு தற்போது கடுமையான பனிப் பொழிவு காணப்படுகிறது. இதனால் அவரது நிகழ்ச்சிகள் பாதிக்கப்பட்டன. சியோல் நகரில் உள்ள தேசிய போர்வீரர்களின் நினைவிடத்தில் கலாம் அஞ்சலி செலுத்துவதாக இருந்தது. ஆனால் பனிப்பொழிவின் காரணமாக அந்த நினைவிடத்தில் கலாம் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவது ஒத்திப் போடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் சியோல் நகரமே பனிப்பொழிவின் காரணமாக வென்பனி போர்த்திய நகரமாக காட்சி அளித்தது.

தென்கொரிய ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் கலாமுக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய பாரம்பரிய வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பனிப்பொழிவின் காரணமாக இந்நிகழ்ச்சியும் ஒத்தி வைக்கப்பட்டது. (கு)

உலக தரிசனம்

# கனடாவின் புதிய பிரதமர்

(டொரண்டோ)



கனடா நாட்டின் புதிய பிரதமராக கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஸ்யபன் ஹார்ப்பர் (47) கடந்த திங்கட்கிழமை பதவியேற்றார் 2-ஆம் எலிசபெத் ராணிக்கு விசுவாசமாக இருப்பேன் என்று பதவியேற்பின்போது ஹார்ப்பர் உள்பட அமைச்சர்கள் அனைவரும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

ஹார்ப்பர் கனடாவின் 22வது பிரதமர். புதிய அமைச்சரவையில் 6பேர் பெண்களாவர் கன்சர்வேடிவ் கட்சி சார்பில் போட்டியிட்டதில் 14 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனா. ஒட்டாவாவில் உள்ள கவர்னர் ஜெனரல் மாளிகையில் நடந்த விழாவில் ஹார்ப்பர் மற்றும் 26 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

முன்னதாக பதவியேற்பு விழாவுக்கு வழக்கமாக வரும் லிமோசின் காரைத் தவிர்த்து டாட்ஜ் காரவன் காரில் தமது மனைவி தாய் 2 குழந்தைகள் மற்றும் நண்பர்களுடன் வந்தார் ஹார்ப்பர். கனடாவில் 14ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது கன்சர்வேடிவ் கட்சி. (கு)

# நேபாளத்தில் தீவரவாதிகள்தாக்குதல்

## அரச அலுவலகங்கள் பல தீக்கிரை

(காட்மாண்ட்)

நேபாளத்தில் அரசுக்கு எதிராக கம்யூனிஸ்ட் தீவிரவாதிகள் கடுமையாகப் போராடி வருகிறார்கள் சமீபத்தில் அரசுக்கு எதிராக ஒரு வாரத்திற்கு முழு அடைப்பு போராட்டம் நடத்தினார்கள். நேற்று அங்கு உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடத்த தீவிரவாதிகள் எதிர்ப்பு தெரிவித்ததுடன் தேர்தலை புறக்கணிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலையில் தீவிரவாதிகள் கிழக்கு நேபாளத்தில் அரசு அலுவலகங்கள், பள்ளிக் கூடங்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள். இதேபோல் வங்கிகள் மீதும் குண்டு வீசி தாக்குதல் நடத்தினார்கள். இதில் பள்ளிகள், அரசு அலுவலகங்கள் வங்கி கட்டங்கள் தீப்பற்றி எரிந்தன.

அரசு ஊழியர்கள் வேலைக்கு வருவதை தடுக்கும் நோக்கத்தில் இந்த தாக்குதலில் ஈடுபட்டனர். அதிகாலை நேரத்தில் தாக்குதல் நடைபெற்றதால் இதில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. தகவல் கிடைத்ததும் பாதுகாப்பு படையினர் அங்கு விரைந்தனர்.

காட்மாண்டுவில் இருந்து 400கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தான்குதா என்ற நகரில் இந்த தாக்குதல் நடந்தது. தாக்குதலில் பள்ளி கட்டடங்கள் அரசு



அலுவலகங்களுக்கு பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

என்றாலும் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் திட்டமிட்டபடி உள்ளாட்சி தேர்தல் தொடங்கியது. நேபாளத்தில் 7 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக தற்போது உள்ளாட்சி தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (கு)

# அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானைச் சேர்ந்த சிந்திக்களும், பலுச்சிஸ்தானியர்களும், சுய நிர்ணய உரிமை கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பாகிஸ்தானில் பஞ்சாபிக்கள், சிந்திக்கள், பலுச்சிஸ்தானியர்கள் என பல இன மக்கள் வசிக்கிறார்கள். இருந்த போதிலும் அரசியலிலும், இராணுவத்திலும் ஆதிக்கம் செலுத்தி வருவது பஞ்சாபிக்கள்தான். சிந் திக்களும், பலுச்சிஸ்தானியர்களும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் வாழும் சிந்திக்களும், பலுச்சிஸ்தானியர்களும் நேற்று முன்தினம் வாஷிங்டன் நகரில் உள்ள பாகிஸ்தான் துதரகம் முன்பு திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிந் திக்கள் சம உரிமையோடும், மரியாதையாகவும், சுதந்திரமாகவும் வாழ சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று கோரி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பலுச்சிஸ்தான் மாநிலத்தில் அமெரிக்கா விமானத் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து பலுச்சிஸ்தானியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இராணுவ சர்வாதிகாரம்இராணுவ சர்வதிகாரத்தை எதிர்த்து, அனைத்து பலுச்சிஸ்தானியர்களும் கைகோர்த்து உள்ளனர் என்று டாக்டர் மாலோக்டோங்கி கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், 1947 ஆம் ஆண்டு முதல் தங்கள் உரிமைக்காக பலுச்சிஸ்தானியர்கள் போராடி வருகிறார்கள் என்றும் தெரிவித்தார். இன்றைய பாகிஸ்தான், முகமது அலிஜின்னாவின் பாகிஸ்தான் இல்லை என்று ரசூல்பக்ஷ் கூறினார். மேலும் 1940ஆம் ஆண்டு லாகூர் தீர்மானத்தின்படி சிந்து மாநிலம் பாகிஸ் தானுடன் இணைந்தது. அந்தத் தீர்மானத்தில் இராணுவம், வெளிநாட்டு விவகாரம், நிதி ஆகியவை மட்டுமே மத்திய அரசிடம் இருக்கும் மற்ற அனைத்தும் மாநிலங்களிடம் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

வங்காளதேசம் பிரிந்து போன போது என்ன நிலைமை இருந்ததோ அது தான் இப்போது பாகிஸ் தானில் நிலவுகிறது. டெல்ட்டாப் பகுதியில் ஆற்று நீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு கடலோரப் பகுதி பாலைவனமாக மாறிவருகிறது என்றார்.

சிந்துநதி மீது அணைகள் கட்டப்பட்டு வருவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குரல்கொடுத்தனர். (கு)

# விமான கடத்தல் சதி தீவிரவாதி பிடிபட்டான்

(கோலாலம்பூர்)

ஜமாத் இஸ்லாமிக் என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி சல்மாத் கஸ்தாரியான வயது 45விமான நிலையத்தை குண்டுவைத்து தகர்க்கும் சதி மற்றும் விமான கடத்தல் சதி ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பதை சிங்கப்பூர் உளவுத்துறை கண்டுபிடித்தது. இதனை அறிந்த அவன் தலைமறைவாகி விட்டான்.

இந்த நிலையில் இந்தோனேஷியாவில் உள்ள ஜாவா தீவில் பதுங்கி இருந்த போது பொலிஸில் சிக்கினான். அந்த நாட்டு தீவிரவாதிகள் தடுப்புபடை பொலிஸார் அவனை கைதுசெய்து விசாரித்து வருகின்றனர்.

இவனது கூட்டாளி ஹாம்பாலி என்பவர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு அமெரிக்காவில் ஜெயிலில் இருக்கிறான் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

> தீய எண்ணங்களுக்கு எப்போதாவது சிறிய தேனும் இடம் கொடுத்துவிட்டால் பின் உறுதி யுடன் நன்மையை நாடுதல் கஷ்டமாய்விடும்.
> -ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் வேலை

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை இலகுவில் அடைந்துவிட முடியாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

நீண்ட காலமாக யுத்தம் நடந்த வகையில் இலங்கைக்குள் வேண்டாத தொடர்புகள் நுழைந்துவிட்டன.

குறிப்பாக இலங்கையில் உள்நாட்டு யுத் தம் நடைபெறுவதனால், ஆயுத விற்பனை யில் அதிக லாபம் பெற்ற நாடுகள் ஒரு போதும் சமா தானத்திற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால், அது தமது ஆயுத விற்பனைக்குப் பங்கமாகி விடும் என்பதே அந்த நாடுகளின் நினைப்பு.

இதற்காக யுத்தத்தைத் தூண்டும் வகை யிலான செயற்பாடுகள் நடந்த வண்ணம் இருக்கும்.

இது ஒரு புற நிகழ்வு. மறுபுறத்தில் இலங் கையின் அரசியல் எல்லைக்குள் கால் பதிக் கும் வல்லரசுகளின் போக்கும், சமாதானத் துக்குரியதல்ல.

அதாவது அமெரிக்கா போன்ற நாடுகள் இந்துமா சமுத்திரத்தில் தமது சர்வபலத்தை செலுத்துவதற்கு இலங்கையைச் சாதகமாக்க எண்ணுகின்றன.

அதேநேரம் அண்டை நாடான இந்தியா வோ இலங்கையில் சமாதானம் என்பதற்கப் பால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நகர்வுக ளுக்கேற்ப தனது முடிபுகளை மாற்றி வருகின் றது.

இதனால் இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது முடி யாத காரியம். இதேவேளை இலங்கைக்குள் இருக்கக் கூடிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமை யின்மை-தூரநோக்கின்மை போன்றவற்றி னால் இலங்கையின் இன விவகாரத்தில் யாரும் தலையிடலாமென்ற நிலைப்பாடு ஏற்பாடாகி விட்டது.

குறிப்பாக ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் இனவாதம் -மதவாதம் என்ற பழைமைக்குள் மூழ்கி புறச்சுழல் பற்றி சிந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றன.

சமாதானத்தைத் தடுக்கும் ஒவ்வொரு நிகழ் வும் தேசத்தைக் காக்கும் செயலாகக் கருதும் ஜே.வி.பியினர் தமது செயற்பாட்டினால் நாட் டின் எதிர்காலம் பாழாகிப் போகின்றது என் னும் உண்மையை உணரத் தவறிவிடுகின் றனர்.

இத்தகைய குறுகிய அரசியல் லாபம் கரு தும் கட்சிகளாலேயே வெளிநாடுகள் இலங் கையின் இனப்பிரச்சினைக்கு எண்ணெய் விட்டு எரிட்யூடுகின்றன.

இந் நாட்டைக் காப்பாற்ற வேண்டுமாயின் அதற்கான ஒரே வழி தமிழ் மக்கள் சுதந்திர மாக சர்வ உரிமையும் பெற்றவர்களாக வாழ் வதற்குரிய ஏற்பாடுகளை செய்வதேயாகும்.

இதனை செய்யத் தவறும் போது பிள்ளை யையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவோர் உள்நுழைவது தவிர்க்கமுடியாததே.

# மருத்துவர்களின் கோரிக்கையை அரசு ஏற்றால் வேலைநிறுத்தம்

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மருத் துவர்களின் கோரிக்கையை ஏற்று அரசாங்கம் சம்பள உயர்வு திட்டத்தினை நடைமுறைப்படுத்தினால் அரச தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையில் உள்ளோரின் சம்பள உயர்வில் உள்ள முரண்பாட்டைக் களையவென சம்பள உயர்வுத் திட் டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இடைநிறுத்த உத்தர விட்டார். ஆனால் இந்த இடை நிறுத்த சுற்றறிக்கையை இரத்து செய்யக் கோரி அரச மருத்துவர்கள் வேலை நிறுத்தப் போராட் டத்தை நடத்தி வருகின்றனர்.

இந் நிலையில் கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அரசாங்க தொழிலாளர் சங்கத்தின் தலைவர் டபிள்யூ எச். பியதாச, வரவு- செலவுத்திட்டத்தில் அரச சேவையில் உள்ளவர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டது. இந்த சம்பள உயர்வுத் திட்டத்தில் பல முரண்பாடுகள் காணப்படுகின் றன. அதாவது குறைந்த சம்பளம் பெறும் அரச சேவை யில் உள்ளவர்களுக்கு குறைந்த அளவான சம்பள உயர் வும் அரச முகாமைத்துவ மற்றும் உயர் பதவிகளில் உள்ள கூடிய சம்பளம் பெறுபவர்களுக்கு அதிகளவிலும் சம்பள்ம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அரச சேவை தொழிலாளர் சங்கங் கள் அனைத்தும் ஒன்றிணைந்து இது தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷவிடம் முறையிட்டோம். இதை ஏற்று சம்பள உயர்வுத் திட்டத்தை 4மாதங் களுக்கு அவர் இடை நிறுத்தினார்.

தற்போது அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட சம்பள உயர் வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கோரி அரச மருத்து வர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது நியாய மற்றது. மருத்துவர்களின் கோரிக்கையை ஏற்காமல் சம்பள உயர்வுத் திட்டத்தை இடைநிறுத்தி வைத்து உரிய தீர்வை ஜனாதிபதி உருவாக்க வேண்டும் என்றார். (கு)

# ஜெனீவா பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரச தரப்பு பிரதிநிதிகள் தகுதியற்றவர்கள்

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த உடன்பாடு குறித்த பேச்சுவார்த்தைக்கு அரசாங்கத்தினால் பிரேரிக் கப்பட்ட உறுப்பினர்கள் தகுதியற்றவர்கள் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துவெளியிட்ட அதன் பேச்சாளர் நிஸாந்த சிறீவர்ணசிங்க ஜெனிவாப் பேச்சுவார்த்தைக்கு ஜாதிகஹெல உறுமய ஆரம்பத்தில் இருந்தே தனது எதிர்ப் பைக் காட்டி வந்துள்ளது. அத்துடன் பேச்சுவார்த்தைக்கு செல்பவர்கள் குறித்து எமக்கு திருப்தி இல்லை. காரணம் ஆரம் பகால திம்பு பேச்சில் இருந்து இன்று வரை விடுதலைப் புலி கள் தரப்பில் பேச்சுக்களுக்கு முனைவர் அன்ரன் பால சிங்கம் தலைமை தாங்குகிறார். அவர் பேச்சுவார்த்தை குறித்து சிறந்த அனுபவம் கொண்டவர் ஆனால் அரசு தரப்பில் அப்படி அனுபவம் உள்ளவர்கள் இல்லை எனத் தெரிவித்துள் ளார்.

இதேவேளை, இது குறித்து இனத்துவ முரண் பாட்டு கற்கை நெறி தொடர்பான ஆலோசகர் செரான் லக் திலக கருத்துத் தெரிவிக்கையில், இனப்பிரச் சினைத் தீர்வுக்கு அடிப்படையான யுத்த நிறுத்த உடன்பாடு குறித்த பேச்சு வார்த்தைக்கு மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் நியமிக் கப்படுவது அவசியம் இது ஒரு சமூக விஞ்ஞானம் நுட்ப மான அணு குமுறைகள் கடைப் பிடிக்க வேண்டியது அவசியம்.

ஆனால் அரசதரப்பு பிரதிநிதிகள் அந்த அறிவை அனுபவத்தை பெற்றிருக்கின்றார்களா என்பது கேள்வியே எனத் தெரிவித்துள்ளார். (கு)

## அரசியல் யாப்புச் சபையை மீள உருவாக்கக் கோரி மனு!

(கொழும்பு)

அரசியல் யாப்பு சபையை மீள உருவாக்கக் கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் சார்பில் வழக்குத் தொட ரப்பட்டுள்ளது.

மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக் கின் மனுவில் அரசியல் யாப்பு சபைய்ய மீள உருவாக் காமையினால் பல சுயாதீன ஆணைக்குழுக்கள் செயலி ழந்துள்ளன.

தேசிய பொலிஸ் ஆணையம் செயலிழந்துள்ள நிலை யில் அதன் அதிகாரங்களை பொலிஸ் மா அதிபருக்கு கைய ளிக்கும் நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சின் ஆலோ சகர் கொட்டக தெனியா மேற்கொண்டுள்ளார்.

இலங்கை அரசியல் யாப்பின்படி அரசியல் யாப்பு சபையை மீள உருவாக்கவும் பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரங்களை மாற்றத் தடைவிதிக்கவும் நீதிமன்றம் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட் டிருந்தது.

இம்மனு நீதிபதிகள் கே. சிறிபவன் சிசிர டி அப்ரியூ ஆகி யோர் முன்னிலையில் விசாரணைக்கு ஏற்கப்பட்டு வழக் கின் அடுத்த விசாரணை எதிர்வரும் 13ஆம் திகதி நடை பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க , எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற சபாநாயகர் லொக்கு பண்டார, ஜனாதிபதியின் செலாளர் லலித் வீரதுங்க, சட்டமா அதிபர் , பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனியா மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந்த வழக்கின் பிரதி வாதி களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் சார்பில் சட்டத் தரணி சுமத்திரன் மற்றும் விரன் கொரேய ஆகியோரும் சட்டமா அதிபரின் சார்பில் நெரின் புள்ளே ரணில் விக்கிர மசிங்க சார்பில் தயா பெல்பொல ஆகியோர் முன்னிலை யாயினர். (து)

## அடிப்படை வசதிகளற்ற சிறார் நலன்புரி நிலையங்கள்

(கொழும்பு)

இலங்கையின் சிறார் நலன்புரி நியைங்கள் அடிப் படை வசதிகளின்றி இருப்பதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக் கையில், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களி னால் நடத்தப்படுகிற 329 நலன்புரி நிலையங்களில் இது குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டன.

வறுமையின் காரணமாக அரச சார்பற்ற நிறுவனங் களின் கீழ் இயங்கப்படும் சிறார்கள் நலன்புரி நிலையங் களில் பெருமளவு சிறார் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோரது பெற்றோர் உயிருடன் தான் உள்ளனர்.


இந்த நிறுவனங்களின் அக்கறைப்பாடு திருப்திய ளிக்க வில்லை. அடிப்படை வசதிகளும் குறைவாகவே உள்ளன. வடக்கு-கிழக்கில் உள்ள 38 வீதமான சிறார் நலன்புரி நிலையங்களில் சிறாருக்கு படுக்கை வசதி கள் இல்லை. 44 வீதமான நிலையங்களில் விளையாட் டுக்கான இடங்கள் இல்லை இலங்கையின் இத்தகைய சிறார்கள் நிலையங்களில் பெரும்பாலானோர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளது போல் நடத்தப்படுகின்ற னர் . எனவே இத்தகைய நிலைமையைச் சீரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. (க)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

இழந்த கல்வியை மீட்கும் திறன் விருத்திக்கான செய லமர்வு இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லு ரியில் நடைபெறவுள்ளது.

தரம் 4, 5, 6, 7, 8, 9களில் தமிழ், கணிதம்கற்பிக்கும் ஆசிரியர்களை இச் செயலமர்வில் பங்கு பற்றுமாறு தென் மராட்சி வலய பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரி வித்துள்ளார். (க-108)



## சாயி அருளமுதம்

வரணட பாலைவனம் போலிருக்கும் இதயங் களிலே அன்பின் விதைகளைத்தூவுங்கள். அவற்றிலிருந்து பிறக்கும் அன்பு முளை கள் மகிழ்ச்சியினால் அந்த வெற்றுப் பிர தேசத்தைப் பசுமையாக்கிவிடும். அன் பின் மலர்வு பவனத்தைச் சுகந்த மாயமக் கும். அன் பெனும ஆறு பள்ளத்தாக்குகளில் ரீங்காரம் செய்து கொண்டு பாயும். ஒவ் வொரு பட்சியும் மிருகம் குழந்தையும் அன் பின் கீதத்தை இசைககும்.

# விசுவரூபம் எடுத்து இருக்கும் விடுதலைப்புலிகளின் கடற்படை

## 'டெய்லி மிரர்' வர்ணிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படையானது 23 கப்பல்களுடன் விசுவரூபம் எடுத்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் டெய்லி மிரர் ஆங்கில நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

அந்தக் கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு;

விடுதலைப்புலிகளின் கடற்புலி உறுப்பினர்கள் பலர் அண்மைக்காலமாக பயிற்சிகளை முடித்து வெளியேறிவருகின்றனர்.

மறவன் மற்றும் திருவடி பயிற்சி முகாம்களிலிருந்து பயிற்சிகளை முடித்து வெளியேறும் நிகழ்வில் கடற்புலிகளின் முக்கிய தளபதிகளான குகன், செஞ்சீரன், விநாயகம், மோகன், மகேந்திரன், மங்களேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ள நிலையில் உலகின் மிகப் பயங்கரமான கெரில்லா கடற்படையாக இருக்கும் விடுதலைப்புலிகளின் கடற்படைக்கு அவர்கள் பலரை இணைத்து வருகின்றனர்.

இஸ்ரேலியத் தயாரிப்பான டோராப் படகைக் கொண்டு பெண் கடற்புலி ஒருவர் அண்மையில் சிறிலங்காக் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தி பெரும் அழிவையேற்படுத்தியிருந்தார்.

பூகோள ரீதியாக தமிழகத்தின் பாதுகாப்பானது கடலுடன் தொடர்புபட்டுள்ளது என்று விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எண்ணுகின்றார்.

தங்களின் கடற்படை, பலம் வாய்ந்ததாக இருந்தாலே தங்களால் கைப்பற்றப்பட்டிருக்கும் தரைப் பகுதியினை பாதுகாக்க முடியும் என்றும் எதிரியை விரட்டியடிக்க முடியும் என்றும் அவர் நம்புகின்றார்.

இதுவே விடுதலைப்புலிகளின் கடற்படையானது படிப்படியாக வளர்ச்சி பெற்று வருவதற்குக் காரணமாகும் என்றும் அந்த செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## பேராசிரியர் எஸ்.ஆர்.எச்...

வருகின்றோம். மேற்படி துணைவேந்தரை தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழகத்தின் வாக்களிப்பு கடந்த 28.01.2006 அன்று நடைபெற்றுள்ளது. வாக்களிப்பின் பிரகாரம் பேராசிரியர் கே.கந்தசாமி, பேராசிரியர் இ.குமாரவடிவேல், பேராசிரியர் எஸ்.ஆர்.எச். ஹூல் ஆகியோர் துணைவேந்தர் பதவிக்கான அடுத்த தெரிவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பேராசிரியர் கே.கந்தசாமி அதிகூடிய வாக்குகளையும், பேராசிரியர் குமாரவடிவேல் 2 ஆம் இடத்திலும், பேராசிரியர் எஸ்.ஆர். எச்.ஹூல் மூன்றாம் இடத்திலும் உள்ளார்.

எனினும் பேராசிரியர் எஸ்.ஆர். எச். ஹூல் தனக்குள்ள தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி துணைவேந்தர் பதவியைப் பெற்றுக்கொள்ள கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருவதாக மிகவும் நம்பகரமான தகவல் மூலம் அறிகிறோம்.

பேராசிரியர் எஸ்.ஆர். எச்.ஹூல் ஒரு தீவிரமான தமிழின விரோதப்போக்குக் கொண்டவர். கடந்த காலங்களில் தமிழ்மக்கள் இனப்பிரச்சினையின் விளைவாய் துன்ப துயரங்கள் போர் அழிவுகளை சந்தித்த போதெல்லாம் அவற்றை வரவேற்று நியாயப்படுத்தி கடுமையான பிரசார செயற்பாடுகளில் ஈடுபட்டு தமிழ் மக்களின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டவர். இது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மன்னிக்க முடியாத மாபெரும் தேசத்துரோகமாகும்.

யாழ்.பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் அரும்பெரும் கல்விச்சொத்து. எமது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தேர்ந்தெடுக்கின்ற பொறுப்புள்ள உயர்ந்த கல்வி நிறுவனம். அந்த பொறுப்புள்ள கல்வி நிறுவனத்தை நிர்வகிக்கின்ற துணைவேந்தராக ஒரு சமூகப்பொறுப்பும் இனப்பற்றுமுடைய ஒருவரே எம்மால் வேண்டப்படுகின்றார்.

எனவே பேராசிரியர் எஸ்.ஆர். எச்.ஹூல் எமது பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தராக தெரிவு செய்யப்படுவதனை நாம் விரும்பவில்லை எமது விருப்புக்கு மாறாக உங்கள் தெரிவு அமையாது என முழுமையாக நம்புகின்றோம். எமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக உங்கள் தெரிவு இடம்பெறுவதை நாம் விரும்பவில்லை. எனவே மேற்படி வாக்களிப்பில் கூடிய வாக்குகளை பெற்றுக்கொண்ட இருவரில் ஒருவரைத் தெரிவு செய்து பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## விடுதலை...

நண்பர்களாக இருப்பார்கள் என்றார்.

இந்த விடயங்களைத் தென்னிலங்கை மக்களிடம் தெளிவிப்பதாகவும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கான முழு ஆதரவை சர்வதேச சமூகம் அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் மதத் தலைமைப் பிரதிநிதிகள் குழு உறுதியளித்தது. (ந-4)

## கடத்தப்பட்ட...

புறப்பட்டோம் என்றார்.

கடத்தப்பட்ட பணியாளர்கள் விடுவிக்கப்படும் வரை வெலிகந்தப்பகுதியில் இந்து ஆலயத்தில் முகாம் அமைத்து தங்கவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர். (ந)

## தமிழ்ச்செல்வனுடன் சந்திரசேகரன் சந்திப்பு

(கிளிநொச்சி)

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பில் விடுதலைப்புலிகளின் கருத்தை அறிந்து கொள்வதற்காக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நேற்றுச் சந்தித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலை எவ்வாறு அணுகுவது மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பன தொடர்பில் தமிழ்ச்செல்வனுடன் ஆராய்ந்ததாக சந்திரசேகரன் தெரிவித்தார்.

தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இந்தத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும். அதனை மலையக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு தமது கட்சி வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று மலையகப் பிரதேசத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை எவ்வளவிற்கு அதிகரிக்க முடியுமோ அதற்கு எவ்வாறான அரசியல் முயற்சிகள் வெற்றி பெறுமோ அவற்றை மலையகத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக புலிகளுடன் நேற்றைய பேச்சுவார்த்தையில் உடன்பாடு கிடைத்ததாகவும் அவர் கூறினார். (ந)

## பேச்சுவார்த்தையைக்...


ஜெனீவாவில் நடைபெறப் போகும் பேச்சுக்களின்போது விடுதலைப்புலிகளுடன் காரசாரமான விவாதங்களை நடத்த வேண்டும் என அரசதரப்புப் பிரதிநிதிகளுக்கு ஜே.வி.பியினர் ஆலோசனை வழங்கிவருகின்றனராம்.

இரண்டு தினங்கள் நடைபெறும் பேச்சுக்களின் போது எந்தவிதமான முடிபுகளையும் எடுக்கக் கூடாதென்பது ஜே.வி.பியின் கட்டளையாகவுள்ளது.

அதேநேரம் ஜெனீவாவில் நடைபெறும் இரண்டு நாள் பேச்சுவார்த்தையுடன் மீளவும் பேசுவதற்கான களநிலைகளை முற்றாக நிராகரிக்க வேண்டுமெனவும் அரச தரப்புப் பிரதிநிதி களுக்கு ஜே.வி.பி கூறிவருவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தமது ஆலோசனைகளை மீறி அரசபிரதிநிதிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் விடுதலைப்புலிகளுடன் ஏதேனும் இணக்கப்பாட்டிற்கு வந்தால் அதனை எதிர்த்து தென்னிலங்கையில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள் என்பவற்றை நடத்துவதற்கும் ஜே. வி.பி சதித் திட்டம் தீட்டியுள்ளதாகவும் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் ஜே.வி.பி ஜெனீவாவில் இடம் பெறும் பேச்சுவார்த்தைகள் சிங்கள தேசத்திற்கும் பௌத்த மதத்திற்கும் ஆபத்தானதென பிரசாரம் செய்யவும் திட்டம் தீட்டியுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ந)




## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சோமசுந்தரம்

**(இளைப்பாறிய வைத்திய அதிகாரி)**

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஆறுமுகம் சோமசுந்தரம் 07.02.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தில்லையம்பலம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா செல்லம்மாவின் அன்புக் கணவரும், சந்திரகுமாரி(கொழும்பு), காலஞ்சென்ற பாலேந்திரன்(கனடா), சுரேந்திரன்(யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஜெயக்குமாரி(கனடா), ரவீந்திரன்(கனடா) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், சு.இரத்தினராஜா , பா.சந்திரதேவி, சு.சாந்தகுமாரி, ர.சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சாந்தினி, சர்மிலா ,ஜெனனி, மீரா, தர்சிகா, மயூரன், பவினா, வினித் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜெயரட்ண மலர்சாலையில் நடைபெற்று தகனக் கிரியை கனத்தை இந்து மயானத்தில் 10.02.2006 அன்று நடைபெறும் .

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

354/9 பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்.

தகவல்,
மகன்மார், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-அ-150)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 09.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.